விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 14 செவ்வாய்க்கிழமை (29.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

## தேரர்களை மீண்டும் வீதிக்கு இறங்க வைக்காதீர்கள்

### ஜனாதிபதியை எச்சரித்த தேரர்

(கொழும்பு)

பௌத்த தேரர்களை மீண்டும் மீண்டும் வீதிக்கு இறங்க வைக்காதீர்கள் என மாகல்கந்த சுதத்த தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் இதனை இழக்கச்

▷19

## தாயும் 3 வயது குழந்தையும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு





### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா பறண் நட்டகல் பகுதியில் நேற்றுக் காலை வயல் கிணறொன்றிலிருந்து தாயும் அவரது மூன்று வயது

▷19

### ‘ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்’ எனும் தொனிப் பொருளில்

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்

### கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் ஓரணியில் பங்கேற்பு






(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

“ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்” எனும் தொனிப் பொருளில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## காய்ச்சலால் இளம் யுவதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல், வாந்திபேதி காரணமாக யாழ். போதனா வைத்திய

▷19

## இலங்கை வந்தடைந்த 185 சுற்றுலாப் பயணிகள்

### கொரோனாவுக்கு மத்தியில் நடனமாடி அமோக வரவேற்பு



05ஆம் பக்கம் பார்க்க

## மருதனார்மடம் கொத்தணி 2ஆம் பரிசோதனையில் ஒருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று 426 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒருவருகத தொற்று உறுதி

▷19

## மாகாணங்களுக்கிடையிலான இ.போ.ச பேருந்து சேவைகள்

### ஜனவரி 1ஆம் திகதி முதல் மீள மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா பரவல் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கிடையிலான இ.போ.ச பேருந்து சேவைகள் 2021 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி தகவலை இ.போ.ச தலைவர் கிங்ஸ்லி ரணவக்க கூறியிருக்கின்

▷19

## கொழும்பிலிருந்து பேருந்தில் யாழ்.வந்த தென்னிலங்கை வாசிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து பேருந்தில் யாழ்ப்பாணம் வந்த தென்னிலங்கை வாசியொருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட அதிர்ச்சி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் கோவிட்-19 பரிசோதனையில் கொரோனா நோயாளி ஆக இனம் காணப்பட்டவர்களில், யாழ்.போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்ட தென் பகுதியை சேர்ந்த நபரும் உள்ளடங்குவதாக அறிவிக்கப்பட்

▷19

## உடல்கள் தகனமா? அடக்கமா? மருத்துவ வல்லுநர்களின் அறிக்கையின் பின்பே முடிவு

(கொழும்பு)

கோவிட்-19 உயிரிழப்புகளை எவ்வாறு கையாள்வது என்பதை மறுபரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை அடுத்த சில நாட்களில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம்

▷19

## தம்மிக்கவின் பானத்தை அருந்தியவருக்கு கொரோனா

11ஆம் பக்கம் பார்க்க

## கோவிட் - 19 தொற்றால் மேலும் மூவர் பலி

### உயிரிழப்பு 194 ஆக உயர்வு

### நேற்றும் +549 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோய்த் தொற்றால் மேலும் 3 பேர் உயிரிழந்துள்ள

▷19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதி மாணவர்களுக்கு மாற்று பாடசாலை

## கல்வி அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

மாணவர் ஒருவரின் கல்வி கற்கும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிக்கு மாற்றாக தற்காலிக அடிப்படையில் மற்றொரு பாடசாலையை வழங்குவதில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இந்த திட்டத்தை மத்திய மாகாணத்தில் தொடங்க ஏற்பாடு செய்துள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, இந்த திட்டத்தை நாட்டின் பிற பகுதிகளிலும் செயற்படுத்த கல்வி அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், சில நாட்களுக்குள் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ம-03)

# ரயில் சேவை கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது

## ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

பாதுகாப்பற்ற முறையிலேயே ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அலுவலக ரயில்களில் பயணிகள் சமூக இடைவெளியை பேணுவது சாத்தியமற்றதாக உள்ளது.

இந்நிலைமை தொடர்ந்தால் கோவிட்-19 வைரஸ் பரவலின் ரயில் சேவை கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

சேவையில் ஈடுபடும் அலுவலக ரயில்களில் சமூக இடைவெளி சாத்தியமற்றதாக உள்ளது.

பயணிகள் நெருக்கமாகவே பயணம் செய்கிறார்கள். இவ்வாறான நிலை தொடர்ந்தால் ரயில் சேவை ஊடாக கோவிட்-19 வைரஸ் பரவலின் மூன்றாவது கொத்தணி உருவாகும். பொதுமக்கள் பாதுகாப்பான முறையில் ரயில் சேவையினை பயன்படுத்தும் திட்டத்தை போக்குவரத்து அமைச்சு செயற்படுத்த வேண்டும் என்றார். (ம-03)

# யாழ். மாநகர சபை ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)



யாழ். மாநகரசபை ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விரல்ரேகை (பிங்கர்பிறிண்ட்) இயந்திரம் பழுதாகியுள்ளமையால் அதனைச் சீர் செய்ய வேண்டும் என தெரிவித்து ஊழியர்களின் வேதனத்தில் ஆயிரம் ரூபாய் கழிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் நேற்று காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2013ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட குறித்த விரல்ரேகை (பிங்கர்பிறிண்ட்) இயந்திரம் அண்மையிலேயே பொருத்தப்பட்டதாகவும் அது தற்போது செயலிழந்துள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர். குறித்த இயந்திரத்தை திருத்துவதற்காக 300 ஊழியர்களிடம் தலா ஆயிரம் ரூபாய் கழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த இயந்திரத்தினை அனைத்து ஊழியர்களும் பயன்படுத்துவதால் கொரோனா பரவும் அபாயம் காணப்படுவதாக பல தடவைகள் தெரிவித்தும் மாநகர சபை நிர்வாகத்தினர் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் ஊழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-03,33)

# மதுபான உற்பத்திக்கு சோளம் பயன்படுத்தத் தடை

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)



சோளத்தை பயன்படுத்தி மதுபானம், எதனோல் தயாரிப்பதை தடைசெய்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிட, கலால் திணைக்கள ஆணையாளருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் மதுபானம், எதனோல் தயாரிக்க சோளத்தை பயன்படுத்துவதற்கு தடை விதிப்பது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவுள்ளது.

இதேவேளை விவசாயிகளிடம் இருந்து மஞ்சள் மற்றும் சோளம் உள்ளிட்ட அறுவடைகளை கொள்வனவு செய்யும் போது இடம்பெறும் முறைகேடுகளை தடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன் மஞ்சள் மற்றும் சோளப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு நியாயமான விலையொன்றைப் பெற்றுக் கொடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்ற மஞ்சள் தொகைகளை அழிக்குமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். (ம-03)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

**ஆட்டிறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல்- 2021**

**( 05.01.2021 - 31.12.2021 )**

1. இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம்
2. காலம் :- 04.01.2021 ஆம் திகதி திங்கட்கிழமை
3. நேரம் :- மு.ப.10.30

**இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் சித்தி பெறுபவர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும்.
2. ஒப்பந்த காலம் 05.01.2021 - 31.12.2021
3. இந்நகராட்சி மன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இவ் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.
4. மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புக் கட்டணத்தை அலுவலகத்தில் 04.01.2021 மு.ப.10.00 மணிக்கு முன்னர் செலுத்துவதுடன் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் கொண்டுவருதல் வேண்டும்.
5. குத்தகை தொடர்பான மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை நகராட்சி மன்றத்தின் கணக்குப் பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**2021 ஆம் ஆண்டு ஆட்டிறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல. | குத்தகை விபரம் ( 05.01.2021 - 31.12.2021 ) | ஆகக் குறைந்த ஏலத் தொகை (இதர வரிகள் தவிர ) | கேள்வி வைப்புப் பணம் ( மீளளிக்கக் கூடியது ) |
|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 267, 987.00 | 3,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1, 558,955.00 | 16, 000.00 |

குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் இறைச்சிக் கடைகளிலிருந்து 1/2 Km சுற்றுவட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப் படமாட்டாது.

தவிசாளர்
**திருமதி சிவமங்கை இராமநாதன்**
சாவகச்சேரி நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
29.12.2020

(C-1045)


# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகத்தில் மேலதிக மாவட்டப் பதிவாளராக கடமையாற்றும் திருமதி ஏ. எம். எக்ஸ் அன்ரனிற்றா அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் லலித்தா அலெக்ஸாண்டர்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம், உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகமும் காணி மாவட்டப் பதிவகமும், யாழ்ப்பாணம்.



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# சீனாவை கைவிட்டாலே நிதி

# அமெரிக்கா கடும் நிபந்தனை

(கொழும்பு)

**இலங்கைக்கு தொடர்ந்தும் நிதியுதவியை வழங்குவதற்கு அமெரிக்கா கடுமையான நிபந்தனையை விதித்துள்ளது.**

இதன்படி சீனாவின் செல்வாக்கிற்கு எதிராக இலங்கை தனது இறைமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலே நிதியுதவி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது தொடர்பாக அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் செல்வாக்கிற்கு எதிராக தனது இறைமையை வலியுறுத்தும் நடவடிக்கைகளை இலங்கை எடுத்துள்ளது என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் உறுதி செய்தால் மாத்திரமே இலங்கைக்கு எதிர் காலத்தில் நிதியுதவி வழங்கப்படும் என அந்த சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இன மற்றும் மதக்குழுக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க வேண்டும், ஆட்சி முறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிக்க வேண்டும், இலங்கை மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அவர்களின் மத மற்றும் இன நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும் மதிக்க வேண்டும், உறுதிசெய்ய வேண்டும். குற்றங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என அந்தச் சட்ட மூலம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# வீதியை கடக்க முற்பட்டவரை மோதித்தள்ளிய மோ.சைக்கிள்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஏ-9 வீதியை நடந்து கடக்க முற்பட்ட நபரை வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வீதியைக் கடந்த மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த பாஸ்கரன் (வயது 60) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# "வீதி விபத்துக்களைத் தடுப்போம்"

## போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ''வீதி விபத்துக்களை தடுப்போம்'' எனும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட 2020 ஆண்டிற்கான குறும்பட போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

பல்லூடக வல்லுநர்களைக் கொண்ட குழுவின் தீர்மானத்திற்கமைய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதலாமிடம் - "அந்த ஒரு நொடியில்...'' - கி.டிலக்சன் (912502538V), இரண்டாமிடம் - ''The End'' - சி.சிவராஜ் (880222287V), மூன்றாமிடம் - ''காலன் யார்?'' - றோ. றொஹான் (961610966V), சிறந்த படத்தொகுப்பு - "வீதியின் ஓர் விதி" - ஜே.நிவேதன் (200107500143), சிறந்த இசை - "பாழாகும் கனவுகள்" - ஜெ.நிருசன் (942402937V), சிறந்த நடிப்பு - "மேற்கோள்" - வே.சோபன் (963003269V), சிறந்த ஒளிப்பதிவு - "The End" - சி.சிவராஜ் (880222287V) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ஆறுதல் பரிசுகளை "மேற்கோள்'' - வே.சோபன் (963003269V), "Death Speed" - அ.ர.அறஹீம் (920692834V), ''பாழாகும் கனவுகள்'' - ஜெ.நிருசன் (942402937V), "விழித்திடு'' - ஜோ.ராஜகுமார் (923584862V), ''வீதியின் ஓர் விதி'' - ஜே.நிவேதன் (200107500143), "வீதியில் விழித்திரு'' - ஆ.பெ.அபிஷன் (200030600646) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சுவரொட்டிப் போட்டியில் முதலாமிடம் - எஸ்.டில்ஷாலினி (956080711V), இரண்டாமிடம் - டேவிட் டெனி (922663408V), மூன்றாமிடம் - சிவராஜன் சிவராகவன் (930331210V) ஆகியோரும் ஆறுதல் பரிசுகளை அபிவர்ணா விநாயகமூர்த்தி (20017900245З), திருமதி.மதிவதனி பிரதீபன் (925493791V), நடராசா கண்ணதாஸ் (866483920V) ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.

சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கும் தினம் பின்னர் அறிவிக்கப்படும். (5)

# வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்களை சுரண்டும் மா'பியா

(கொழும்பு)



கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக வெளிநாடுகளில் எவ்வித உதவிகளும் இன்றி சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை சுரண்டும் மாஃபியா செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷாரா இந்துனில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மிக நெருக்கமான நண்பர்களான வர்த்தகர்கள் சிலருக்கு அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கி விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.


மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களை அந் நாட்டுக்கு அழைத்து இந்திய அரசாங்கம் தலையிட்டு 800 ரியால் பணத்தை விமான பயணச்சீட்டுக்காக வழங்குகிறது.

எனினும் மத்திய கிழக்கில் சிக்கியுள்ள இலங்கையர்களிடம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரியால் அறவிடப்படுகிறது. இந்த தொகையானது வழமையான காலத்தில் அறவிடப்படும் தொகையை விட மிகவும் அதிகமான தொகை.

இவ்வாறு அதிகமான தொகையை செலவிட்டு நாடு திரும்பும் நபர்களுக்கு தனிமைப்படுத்துவதற்காக 5 நட்சத்திர ஹோட்டல்களை வழங்கி, அதன் ஊடாக மேலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தை சுரண்டுகின்றனர்.


வெளிநாடுகளில் தொழில்களை இழந்து, நாடு திரும்ப தாமதமாகிய நிலையில் நாடு திரும்பும் இலங்கையர்கள் மரத்தில் இருந்து கீழே விழுந்த நிலைமையில் இருக்கும் போது அரசாங்கத்திற்கு நெருக்கமான வர்த்தகர்களின் மாஃபியா என்ற மாடு முட்டும் கதையாக மாறியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)




**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் ஒளிவிழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிர தம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடாதிபதி கலாநிதி சுதாகர், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ஜெபரட்ணம் அடிகளாரும் கலந்து கொண்டனர். பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இணைய வழியாக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.**

# கிழக்கு மாகாணத்தில் 994 பேருக்கு கொரோனா



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் இது வரையில் 994பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அம்மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

பேலியகொட மீன்சந்தை கொத்தணியின் பின்னர் நேற்று முன்தினம் காலை வரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர், அன்டிஜன் பரிசோதனைகளின் பிரகாரம் 994 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். (ஜ-4)

# 3 மாவட்டங்கள் அதிக அவதானம்

(கொழும்பு)

கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மூன்று மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக, சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் 174 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 153 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 110 பேரும் நேற்று முன்தினம் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தின் அவிசாவளை பிரதேசத்தில் தொடர்ந்தும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ஜ-4)

# பள்ளத்தில் பாய்ந்த கனரக வாகனம்

## இருவர் படுகாயம்



(ஹற்றன்)

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை பகுதியில் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து கனரக வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை வலப்பனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கனரக வாகனமே கினிகத்தேனை பிட்டவல பகுதியில் களனி ஆற்றுக்குள் நீர் வழங்கும் ரம்புக் ஓயாவில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. (ஜ-4)

# கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திற்கு 11 கோடி ரூபா நிதியுதவி

(கொழும்பு)

வடமாகாணத்தில் மனிதநேய நிலக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக, ஜப்பானிய அரசாங்கம் 11 கோடி ரூபாவுக்கும் மேலதிகமாக நிதியுதவி வழங்கியுள்ளது.

இதன்படி, குறித்த தொகை 'மெக்' எனப்படும் நிலக்கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவரும், மெக் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளரும் கடந்த புதன் கிழமை கைச்சாத்திட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்த காணிகளின் பாதுகாப்பை உறுதி செய்து, மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக, அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவியளிப்பதே, இதன் நோக்கமாகும் என ஜப்பானிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில், எண்ணாயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரம் மேம்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது

மெக் எனப்படும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் 2002ஆம் ஆண்டிலிருந்து நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.



இந்த நிலையில், குறித்த நிறுவனத்தின் ஊடாக, இதுவரை சுமார் 92 சதுர கிலோ மீற்றர் சதுர பரப்பில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ)

# திருமணத்தில் பங்கேற்ற 23 பேருக்கு தொற்று

(களுத்துறை)

களுத்துறை, அளுத்கம பகுதியில் திருமண நிகழ்வொன்றில் பங்கேற்ற 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அளுத்கம பகுதியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற சிலர் இவ்வாறு தொற்றுடன் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை மணப்பெண் உட்பட மேலும் இருவருக்கு முன்னதாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த திருமண நிகழ்வில் பங்கேற்ற சுமார் 70 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மேலும் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)



தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் அ.வி.மரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பெனற் அடிகளாரும், பருத்தித்துறை நகரசபை உறுப்பினருமான பிரான்சிஸ் வின்சன் டீ போல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் கனமழை பல இடங்கள் நீரில்





(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கன மழை காரணமாக நகரின் பல பகுதிகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது.

குறிப்பாக திருகோணமலை நகரின் மட்கோ, பள்ளத்தோட்டம், உப்புவெளி, 3ம் கட்டை, அலஸ் தோட்டம், துவரங்காடு, கன்னியா ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

திருகோணமலை, நிலாவெளி பிரதான வீதியிலும் வெள்ளநீர் சடுதியாக அதிகரித்ததால் அவ்வீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (ஜ-4)

# மாகாண சபைத் தேர்தல் கழுத்தை அறுக்கும் செயல்

## தேரர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானித்தால், அது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் தனது கைகளால் கழுத்தை அறுத்து கொண்டமை போல் ஆகிவிடும் என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஒற்றையாட்சி நாடு என்ற வார்த்தையை மட்டும் மீதம் வைத்து விட்டு நாட்டை பிரிவினைவாதத்திற்குள் கொண்டு சென்ற வேலைத்திட்டமே மாகாண சபை என்ற வேலைத்திட்டம். மாகாண சபைகள் ஒரு புறம் நாட்டை பிரிவினையை நோக்கி இட்டுச் செல்லும். மறுபுறம் பணம் வீண் விரயமாகும்.

மாகாண சபை முறைமை இந்த நாட்டுக்கு அவசியமில்லை என்பது கடந்த சில ஆண்டுகளாக ஒப்புவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் போது இயற்கையாக மரணமடையும்மாகாண சபைகளே இருக்கின்றன.

இதனால், இயற்கையாக மரணித்துள்ள மாகாண சபைகளுக்கு உயிரூட்டி, மீண்டும் நடைமுறைப்படுத்தி, அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படுமாயின் அது 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக இருக்காது.

மாகாண சபைகளை ஸ்தாபித்து சிலரது தம்பிமார், சிலரது கணவன்மார், சிலரது உறவினர்கள், பிள்ளைகளுக்கு முதலமைச்சர் பதவிகளை வழங்கி பொதுமக்களின் அபிலாஷைகளை பலி கொடுக்க வேண்டாம் என்பதை நாங்கள் விசேடமாக நினைவூட்டுகிறோம்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மாகாண சபைகள் தொடர்பாக இருக்கும் எதிர்ப்பை அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பாக மாற்றிக்கொள்ள வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஜனாஸா எரிப்பு யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

கொரோனாவினால் மரணிக்கும் உடலங்கள் எரிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசே உமது பலத்தை சிறுபான்மையின் மீது கட்டவிழ்க்காதே, கொரோனாவினால் மரணிக்கும் உடலங்களை நல்லடக்கத்திற்கு அனுமதியளித்திடு, அரசே ஜனாஸாக்களை எரிக்காதே!!, ஜனாஸாக்களில் இனவாதம் வேண்டாம்!, சிறுபான்மை எம்மை நிம்மதியாக வாழவிடுங்கள் என்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஜ-4-5-33)

# 195 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 195 இலங்கையர்கள் நேற்றுத் திங்கட்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

அதனடிப்படையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 150 பேரும் இந்தியாவில் இருந்து 18 பேரும் கட்டாரில் இருந்து 16 பேரும் நாடு திரும்பினர்.

அத்துடன் மாலைதீவில் இருந்து 5 பேரும் பாகிஸ்தானில் இருந்து 4 பேரும் சவுதி அரேபியாவில் இருந்து 2 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)

# முதலாவது சுற்றுலாக்குழு நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலையடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்று முதல் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையம் நேற்று திறக்கப்பட்டுள்ள நிலையில் உக்ரேய்னில் இருந்து முதல் சுற்றுலா குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

185 பேர் இவ்வாறு உக்ரேய்னில் இருந்து நாட்டை வந்தடைந்தனர். (ஜ-4)

# அவுஸ்திரேலியாவில் ஆற்றில் மூழ்கி மட்டக்களப்பு இளைஞன் பலி

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரித் தஞ்சமடைந்திருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞன் விக்டோரியா-நியூ சவுத் வேல்ஸ் மாநில எல்லையில் உள்ள முர்ரே ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - பட்டிருப்பு தொகுதியில் உள்ள பழுகாமம் பகுதியைச் சேர்ந்த சோ.திசாந்தன் என்ற 28 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

புகலிடம்கோரி அவுஸ்திரேலியா சென்ற திசாந்தன், அண்மையில் விக்டோரியாவில் குடியேறி அங்கு வசித்து வந்தார்.

கிறிஸ்மஸ் தினத்தன்று தனது நண்பர்களுடன் விக்டோரியா - நியூ சவுத் வேல்ஸ் மாநில எல்லையில் உள்ள முர்ரே ஆற்றுக்குச் சென்ற இவர் அங்கு நீச்சலில் ஈடுபட்டபோது காணாமல்போயுள்ளார்.

தீவிர தேடுதல் நடவடிக்கையின் பின்னர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# சாரதிகளுக்கு புதிய சட்டம்

(கொழும்பு)



ஒரு வருட காலத்துக்குள் மதுபான பாவனையில் ஈடுபட்டிருந்தால் அவ்வாறான நபர்களுக்கு கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாதென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கனரக வாகன சாரதி அனுமதிக்காக விண்ணப்பித்துள்ள நபர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடம்பெறுமென அவர் தெரிவித்துள்ளார்.

**தனியார் பேருந்துகள் மற்றும்** கனரக வாகன சாரதிகள் மதுபோதையில் வாகனம் செலுத்துவதாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பிக்குகள்-பொலிஸார் இடையே பதற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் பிக்குகள் மற்றும் பொலிஸாருக்கு இடையே ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தை அடுத்து அந்த இடத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று உறுதியாகி உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்வதற்கு எதிராக பிக்குகள் **நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி** செயலகம் அருகே போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இதன்போதே பொலிஸார், பிக்குகள் இடையே பதற்ற நிலை உருவானது.

இந்நிலையில்சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குறித்த இடத்திற்கு வருகை தந்தமையை அடுத்து, பிக்குகள் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களை தகனம் செய்யும் **முறைக்கு தடை விதிக்குமாறு**



அரசாங்கத்தை வலியுறுத்தி மனு ஒன்றினை கையளித்தனர். (ஜ-4)

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி, நிகழ்வை அறிமுகம் செய்யும் வகையிலான ஊடக சந்திப்பு நேற்று யாழ்.பல்கலைக்கழக சபா மண்டபத்தில் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

பீடத்தின் 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாட்டுக்கான இணையத் தளத்தைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சம்பிரதாய பூர்வமாக இயக்கி ஆரம்பித்து வைத்தார்.

ஆய்வுமாநாடுகுறித்து வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடமானது 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாட்டினை "நிலைபேறான அபிவிருத்திக்கான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் : பொருளாதார மீண்மைக்கான தீர்வுகளுக்கு ஊக்கமளித்தல்" என்ற ஆய்வுக் கருப்பொருளில் 2021 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் நடத்த தீர்மானித்திருக்கின்றது.

எதிர்கால சந்ததியினருக்கான வளமான எதிர்காலத்தினை உருவாக்குவதுடன் நெருக்கடிகளைத் தவிர்த்து வாய்ப்புக்களையும் அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் நிவர்த்தி செய்யக்கூடியவாறான நிலைபேறான அபிவிருத்தியினை உருவாக்குவது தற்காலத்தில் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது.

நிலைபேறான அபிவிருத்தியானது பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழலினை ஒன்றிணைப்பதாகக் காணப்படுகின்றது. நாம் எல்லோரும் பல்வேறுபட்ட எதிர்பாராத சவால்களும் இடர்களும் மிகுந்த சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

குறிப்பாக கொவிட் - 19 பேரிடர் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தில் பரந்த தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. இது தொடர்பில் வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் அரிது. இவ் இடர் பல மில்லியன் வேலைவாய்ப்புகளை ஆபத்து நிறைந்ததாக மாற்றியுள்ளது. அத்துடன் நாடுகளின் பொருளாதர மந்தம், வறுமை மற்றும் நிறுவன அமைப்புக்களின் முடக்க நிலை போன்றவற்றை தோற்றுவித்துள்ளது. இவை நிச்சயமற்ற எதிர்காலத்துக்கு வித்திட்டு வருகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் அமைதி மற்றும் செழிப்பு மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்பக் கூடிய நடைமுறைச் சாத்தியமான விடயப்பரப்புகளை உள்ளடக்கிய முகாமைத்துவ மற்றும் வணிக துறைகளில் நடத்தப்படுகின்ற ஆய்வுகளானவை மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக மனிதவளம், நிதி, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் சார் சவால்களை தீர்க்கக்கூடிய பொறிமுறைகளை நிறுவுவதுடன் நிலைபேறான அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலும் முகமாக இவ் ஆய்வுகள் அமையப் பெறுகின்றன.

நீண்டகால அபிவிருத்தியினை மையமாகக் கொண்டு இயங்குகின்ற தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவல்ல தந்திரோபாயங்களைக் கண்டறிதல் மற்றும் கொள்கைத் தீர்மானங்களை வகுத்தல் போன்றன பெரும்பாலான முகாமைத்துவம் மற்றும் வணிகம் சார் ஆய்வுகளின் முடிவுகளாகின்றன.

அந்தவகையில் இவ் ஆய்வு மாநாடானது தனியே நிலைபேறான அபிவிருத்தியின் சமகால மாற்றத்தினை மட்டுமல்லாது எதிர்கால திட்டங்களை முன்கூட்டியே வகுக்கக்கூடிய நிலைபேறான அபிவிருத்தியினை உருவாக்கக்கூடிய வணிகச் செயற்பாடுகளை ஆய்வின் முடிவுகளாக வேண்டி நிற்கின்றன. அதாவது தற்கால தீர்வுகளை வழங்கவல்ல நிலைபேற்ற அபிவிருத்தியின் மோசமான விளைவுகளை தவிர்க்கவல்ல நீண்டகால பொருளாதார விருத்தியினை ஏற்படுத்தக்கூடிய பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான அபிவிருத்தியினை நோக்கியதான பார்வையில் இவ் 6 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடானது தனது கருப்பொருளை உருவாக்கியுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு இதழ்களில் பிரசுரிக்கக்கூடிய சந்தர்ப்பமானது பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது. ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை எதிர்வரும் பெப்ரவரிமாதம் 26 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும். முதல்முறையாக உலகப் புகழ் வாய்ந்த பேராசிரியர்களான **I.M.Pandey, A.Parasuraman** மற்றும் **Gary Dessler** முதன்மைப் பேருரைகளை நடத்தவிருக்கின்றார்கள். இவ் ஆய்வு மாநாட்டின் ஏற்பாட்டுத் தலைவராக முகாமைத்துவ கற்கைள் மற்றும் வணிக பீடத்தினைச் சேர்ந்த கலாநிதி.ந.கெங்காதரன் செயற்படுகின்றார். இவ் ஆய்வு மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களை **https://iccm.maco.jfn.ac.lk** இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (5-4-33)



**உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலய ஆசிரியர் ம.சயந்தறூபனின் வேண்டுகோளுக்கிணங்க "வலுவிழந்தோரை தாங்குவோம்" சுவிட்சர்லாந்தை சேர்ந்த அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பொ.சண்முகசுந்தரத்தினால் புரேவி புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாமில் தங்கியிருந்த காக்கைதீவு கிராமத்தைச் சேர்ந்த 67 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.**



**ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தம்பாட்டி கிராமத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (படம்:- சுபேசன்)**

## வலம்புரி 21 ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்துச் செய்திகள்

### இனிய மனமார்ந்த வாழ்த்துக்கள்

இனிய சேவை, நடுநிலை தவறாத இலட்சியம், ஆசிரியர் தலையங்கம் மற்றும் கல்விமான்களின் இனிய சிந்தனைகள், கல்வி மற்றும் சமூகப் பணி என்பவற்றுடன் நடைபோடும் வலம்புரியின் இலட்சியம் ஓங்கி வளர்க. வாழ்த்துகள்.

**ஆதீனஹர்த்தா சைவ சித்தாந்த பண்டிதர் சிவாகமங்களின் உபதேச வாசஸாபதி.சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள்.**
**தும்பளை நெல்லண்டை பத்திரகாளி, இலட்சுமணன் தோட்டம், ஸ்ரீவீரமாகாளீ, வடபத்திரகாளீ அம்மன் தேவஸ்தானம்.**




## நீரேரிக்குள் பாய்ந்தது 'பட்டா'

(அச்சுவேலி)

யாழிலிருந்து வல்வெட்டித்துறை நோக்கிச் சென்ற பட்டா ரக வாகனம் வல்லைப்பாலத்தின் கடல்நீரேரிப் பகுதியில் கடலுக்குள் பாய்ந்தது.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் படுகாய மடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5-4-18-21-60)





**நெடுந்தீவுப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட புரேவி புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கு கடந்த 24 ஆம் திகதி நிவாரண உதவி வழங்கி வைக்கப் பட்டது. கனடாவில் வசிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த கண்ணன், ஆனந்தி, த.ஜெனார்த்தனன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் சேவகர் கலாநிதி மு.அகிலனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.** (படம்:- சுபேசன்)

# சிறைக் கொத்தணி அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டும் மேலும் 54 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இதுவரை 3,709 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் 3,229 பேர் குணமடைந்துள்ளதாகவும் அவர்களில் 112 பேர் சிறைச்சாலை அதிகாரிகள் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க சர்வதேச உளவுத் தகவல்களின் உதவி

(கொழும்பு)

நாட்டிற்குள் போதைப் பொருள் கடத்தி வரப்படுவதை தடுப்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்துக்கு கிடைக்கும் இரகசிய தகவல்களை பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகம், இலங்கை கடற்படை மற்றும் அரச உளவுச்சேவை இணைந்து போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன. அதன்படி, சர்வதேச போதைப் பொருள் கடத்தல் வலையமைப்பின் நடவடிக்கைகள், போதைப் பொருள் கடத்தும் பாதைகள் உள்ளிட்டவை தொடர்பில் செய்மதித் தகவல்கள் மற்றும் ஏனைய உளவுச் சேவைகளின் தகவல்களை ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் ஊடாக பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தகவல் பரிமாற்றங்களை முன்னெடுத்து, நாட்டில் போதைப் பொருள் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இதற்கான பல சுற்று பேச்சுவார்த்தைகள் அதிகாரிகளிடையே கடந்த வாரங்களில் இடம்பெற்றுள்ளன.

போதைப் பொருள் கடத்தல் மத்திய நிலையமாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே, இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில் அடுத்த ஒரு வாரத்துக்குள், ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் ஊடாக இரகசிய தகவல்களைப் பெற்று முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாம் என அரசின் உயர் மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# வங்கிக்கு பூட்டு

(கொழும்பு)

கொழும்பு-வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல வங்கியொன்று நேற்று திங்கட்கிழமை காலை முதல் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரபல தனியார் வங்கியின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறிப்பிட்ட வங்கிக் கிளை நேற்று காலை அதிரடியாக மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# 12 இலட்சத்தைக் கடந்த பி.சி.ஆர். பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் எண்ணிக்கை 12 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாத்திரம் 12 ஆயிரத்து 22 பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனா தொற்றைக் கண்டறிவதற்காக நாடு முழுவதும் 12 இலட்சத்து 4 ஆயிரத்து 350 பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-7-4)

# பிரித்தானியாவிலிருந்து வந்த இருவருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்தவர்களும் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை 6 மணியுடன் முடிவடைந்த காலப்பகுதியில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய ஆறு பேருக்கு தொற்று உறுதியானதாக கொரோனா தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த 6 பேரில் இருவர் புதியவகை கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள பிரித்தானியாவில் இருந்து வருகை தந்துள்ளனர். அத்தோடு கொரோனா தொற்று உறுதியான மற்றைய நோயாளிகள் மத்திய கிழக்கு மற்றும் இத்தாலியைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம், பிரித்தானியாவில் இருந்து நாடு திரும்பிய பயணிகள் மற்றும் பணியாளர்கள் விசேட ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)


சேவை நலன் பாராட்டு



திருமதி. கௌரி பரந்தாமன்
Spl.Trd.sc. B.Ed.SLPS II
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் - 17.08.1988-04.02.1991
பலாலி ஆசிரிய கலாசாலை - 05.02.1991-31.12.1992
யா/நல்லூர் இ.த.பெ.பாடசாலை - 01.01.1993-02.02.1995
ஆசிரியராக யா/முத்துத்தம்பி.ம.வி. - 03.02.1995-29.11.2009
பிரதி அதிபராக யா/முத்துத்தம்பி ம.வி. - 30.11.2009-04.04.2012
அதிபராக யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை
05.04.2012-29.12.2020

இன்று சேவையில் இருந்து ஓய்வு பெறும் எமது பாடசாலை அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் குழாம் 2020
யாழ்/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை


# அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பது தொடர்பில் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி அரச ஊழியர்களை கடமைக்கு அழைக்கும் போது நிறுவகத்தின் பிரதானிகளின் தேவைக்கு ஏற்ப ஊழியர்கள் அழைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி அரச ஊழியர்கள் வருகைதந்த பின்னர் கொரோனா நிலைமையை கருத்திற் கொண்டு அவசியமான நபர்கள் பணிக்கு அழைக்கப்படுவது போதுமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச ஊழியர்கள் பணிக்கு வரும் போது பற்றிக் அல்லது தங்களுக்கு பிடித்த பொருத்தமான உடைகளில் வரலாம்.நாட்டில் கொரோனா நிலைமையில் குறைவு ஏற்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு அறிவித்தால், அரச ஊழியர்கள் வழமையைப் போன்றே கடமைக்கு வர வேண்டும் என சுற்றறிக்கை வெளியிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வட்டவல கொத்தணி 55 ஆக அதிகரிப்பு

(வட்டவல)

வட்டவல ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்களில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டவல ஆடைத்தொழிற்சாலை ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து அங்கு தொழில் புரிந்தவர்களிடம் பி.சி.ஆர்.மற்றும் அன்டிஜென் பரிசோதனை நடத்தப்பட்டன.

இந்நிலையில் கடந்த 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதில் மேலும் 16 ஊழியர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வட்டவல ஆடைத் தொழிற்சாலையில் இதுவரை 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அம்பகமுவ, கினிகத்தேன, பலன்தொட, வட்டவல, டெம்பல்ஸ்டோ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-7-4)

# கனிய வள மண் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

(மன்னார்)

அவுஸ்திரேலியா நாட்டினை தளமாக கொண்ட நிறுவனம் ஒன்று மன்னாரில் கனியவள மண் அகழ்விற்கான ஆய்வினை முடித்து தற்போது மண் அகழ்வு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

குறித்த கனியவள மண் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவும் மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் அமைப்பும் இணைந்து மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்திற்கு முன் நேற்று திங்கட்கிழமை காலை கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கண்டனப் போராட்டத்தில் சர்வமதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



மன்னாரின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம். கடலில் தாழும் மன்னார் தீவை பாதுகாப்போம், அதிமேதகு ஜனாதிபதி அவர்களே எமது மன்னார் தீவினை கடலில் தாழாது பாதுகாருங்கள், வெள்ளம் வரும் முன்னர் அணை கட்டுவோம், போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கனிய வள மண் அகழ்விற்கு எதிராக கையெழுத்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

குறித்த கண்டனப் போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (5-4-285)


# குடிநீர் வசதியின்றிக் காணப்படும் ஒதியமலைக் கிராமம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஒதியமலைக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது.

ஆயிரம் கிராமங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் சமூக நீர்த்திட்டத்தில் 2019ஆம் ஆண்டு கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் திட்ட வேலைகள் தற்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் குறைந்த கிராமங்களில் ஒன்றாக ஒதியமலை காணப்படுகின்றது.



சுமார் 80 குடும்பங்கள் இக்கிராமத்தில் உள்ளன. கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் இக்கிராமத்தில் காணப் பட்ட குடிநீர் நெருக்கடியினை கருத்திற்கொண்டு தொடங்கப்பட்ட குடிநீர்த் திட்டவேலைகள் தற்போது முழுமை பெறாமல் காணப்படுகின்றன.

தமது கிராமத்திற்கான சுத்தமான குடிநீரினைப் பெற்றுத் தருவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஒதியமலைமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-350)

# எழுமாறான சோதனையில் ஒருவருக்கு தொற்று 65 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பில் கொரோனாத் தொற்று ஒருவருக்கு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அந்த நபருடன் தொடர்புடைய 65 பேரும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 129 பேருமாக 194 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி. ஆர்.பரிசோதனையில் ஒருவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தம்புள்ளவிற்கு செல்பவர்கள் உள்ளிட்ட மரக்கறி வியாபாரிகள் சிலரிடம் எழுமாறாக பி.சி. ஆர். மாதிரிகள் பெறப்பட்டன. எழுமாறாக பி.சி.ஆர்.மாதிரிகளை பெற்ற மையால், மாதிரிகள் பெறப்பட்ட யாரும் தனிமைப்படுத்தப்படவில்லை. மாதிரி பெறப்பட்ட ஒருவரே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை மாலை பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்கும் வரை குறித்த நபர் சமூகத்தில் நடமாடியுள்ளார். இதனால் அவருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் 65 பேரும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 129 பேருமாக 194 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல்வேறுபட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இராணுவத்தினர் சந்தை வளாகம் மற்றும் வர்த்தக தொகுதிகளை கிருமித்தொற்று நீக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேநேரம் பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த தொற்றாளியுடன் தொடர்புகளை பேணியவர்களை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (5-281)

# வீதியின் குறுக்கே மின்கம்பம் அகற்ற வருவார்களா?



(தருமபுரம்)

தருமபுரம் 5ம் வீதியிலுள்ள மின்கம்பம் ஒன்று கடந்த ஒரு வாரமாக வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளதன் காரணமாக அவ்வீதியூடாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த சனிக்கிழமை பெய்த கடும் மழை காரணமாக மின்வயர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

இதனால் அருகிலுள்ள வீட்டிலுள்ளவர்கள் வெளியில் வருவதற்கு மிகவும் அச்சப்படுகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-316)

# 532 கிலோ கடத்தல் மஞ்சள் தீக்கிரையாக்கப்பட்டது

(மன்னார்)

இந்தியாவிலிருந்து மன்னாருக்கு சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட 532 கிலோ கிராம் மஞ்சள் கட்டிகள் மன்னார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நேற்று திங்கட்கிழமை தீயிட்டு அழிக்கப் பட்டன.

மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராச்சி முன்னிலையில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக தலைமையில், பொலிஸ் தடவியல் நிபுணத்துவ பொலிஸார் மன்னார் நகர சபைக்கு சொந்தமான மலக்கழிவகற்றல் நிலையத்தில் வைத்து தீயிட்டு அழிக்கப்பட்டது.



சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட சுற்று நிருபத்தின் அடிப்படையில் கொரோனாத் தொற்று அபாயம் உடைய கடத்தல் பொருட்களை உடனடியாக தீக்கிரையாக்கும்படியான அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்படி மஞ்சள் கட்டிகள் முதற்கட்டமாக தீக் கிரையாக்கப்பட்டன.(5-4-285)

# வர்த்தகர்களுக்கான அவசர கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை மரக்கறி மொத்த வியாபாரி ஒருவர் கொரோனா தொற்றுக் காணப்பட்ட நிலையில் பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் புதுக்குடியிருப்பு பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் இயங்குகின்ற சகல வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள்மற்றும்அங்கு பணியாற்றுகின்ற அனைவரையும் பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

இவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறும் எனவும் தவறாது அனைவரும் பரிசோதனைகளை மேற் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்யாமல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த வர்த்தக நிலையங்கள் மூடப் படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5-4-281)

# இராசிபலன்

29.12.2020
மார்கழி 14, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 8.40 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 6.28 மணிவரை
சுபநேரம் 10.58-12.28 மணிவரை
இராகுகாலம் 3.28-4.58 மணிவரை
சந்திராஷ்டம்-அனுசம், கேட்டை
பூரணை விரதம், இரவு ஆருத்திராபிஷேகம் வளவன்


மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


ரிஷபம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், வியாபார விருத்தியுண்டு.


மிதுனம்

ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், பொதுநல ஈடுபட்டால் புகழ் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


சிம்மம்

தொழில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும், நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.


துலாம்

உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


விருச்சிகம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


தனுசு

குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்திதரும்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


கும்பம்

பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.


மீனம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

வீரமும், விவேகமும் மனிதனின் மாபெரும் பண்புகள்

# புனரமைப்பு செய்யாதோருக்கு அனுமதிப்பத்திரம் கிடையாது

## சுற்றாடல் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)
கருங்கல், மண் மற்றும் மணல் அகழ்விற்கான பகுதிகளை உரிய முறையில் புனரமைப்பு செய்யாதோருக்கு மீண்டும் அதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கருங்கல், மண் மற்றும் மணல் அகழ்விற்கான பகுதிகளை உரிய முறையில் பேணாவிடின், குறித்த பகுதிகள் கடுமையாக சேதமடையும் என சுற்றாடல் அமைச்சு அறிக்கையூடாக அறிவித்துள்ளது.

அந்த பகுதிகளில், விலங்குகள் உள்ளிட்டவை விபத்திற்கு உள்ளாவதுடன் சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புகளும் பதிவாகக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கருங்கல், மண் மற்றும் மணல் அகழ்விற்கான பகுதிகளை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், மக்களை ஈர்க்கும் வகையில் அவற்றை அபிவிருத்தி செய்யுமாறு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஜ-4)

# தப்பியோடிய கொரோனா நோயாளி கண்டுபிடிப்பு; 22 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(கொழும்பு)
சுகஸ்கந்த பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் தப்பிச் சென்றதை அடுத்து குறித்த பகுதியில் வசிக்கும் 22 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற நபர் சப்புஸ்கந்தையின் மாகொல வடக்கில் அவரது காதலி வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த ஆறு வீடுகளைச்சேர்ந்த 22 பேரே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கொரோனாத் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட போது அல்லது சிகிச்சையளிக்கப்படும் போது தப்பியோடியவர்களுக்கு ஆதரவு வழங்கும் அனைவருக்கும் எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு



(திருகோணமலை)
காலநிலை மாற்றம் காரணமாக திருகோணமலை மாவட்ட மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக தாம் கடலுக்கு செல்ல முடியாதிருப்பதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும், கொரோனா பேரிடர் காரணமாக தொழிலை மேற்கொள்ள முடியாமலிருந்த காலப்பகுதியில் தாம் மிகவும் அல்லலுற்றதாக தெரிவித்த மீனவர்கள், தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக தாம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மீன்பிடிக்க செல்வதற்கு தம் உயிரை பணயம் வைத்து கடலுக்கு செல்ல வேண்டிய நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் தற்போது பிடித்துவரும் மீன்களை சந்தைப்படுத்தவும் போதிய விலை கிடைக்காதமையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஜ-4)

# கொவிட் தொற்றினால் 78 பேர் வீடுகளில் மரணம்

## அதிர்ச்சியூட்டும் தகவல்

(கொழும்பு)
கொவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக, கடந்த 6 மாதங்களில் கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 78 பேர் தமது வீடுகளிலேயே மரணித்துள்ளதாக, கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னகோன் தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் வீடுகளில் உயிரிழந்த 383 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே 78 பேர் கொவிட் தொற்றினால் உயிரிழந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

வீடுகளில் மரணிப்போருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடைமுறை கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதும், வீட்டில் உயிரிழந்த முதல் கொவிட் தொற்றாளர் கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதியே அடையாளம் காணப்பட்டதாகவும், அன்று முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப்பகுதியில் இந்த வீடுகளில் நிகழ்ந்த 78 கொவிட் மரணங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரதான சட்ட வைத்திய அதிகாரி, விஷேட வைத்திய நிபுணர் அஜித் தென்னகோன் கூறினார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு, கடந்த முதலாம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வீடுகளில் நிகழ்ந்த 130 மரணங்கள் பதிவானதாகவும் அதில் 37 மரணங்கள் கொவிட்-19 தொற்றினால் நிகழ்ந்தவை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-7-4)

# மர்மநபரின் கத்திக்குத்தில் எழுவர் பலி

## சீனாவில் பயங்கரம்




(பீஜிங்)

சீனாவில் மர்மநபர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஏழு பேர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் வடக்கு பகுதியில் லியோனிங் மாகாணத்திலுள்ள கையுவான் நகரில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பொது குளியலறைக்கு வெளியே கத்தியுடன் வந்த மர்ம நபர் அங்கிருந்தவர்கள் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கத்திக்குத்து தாக்குதலால் அதிர்ச்சியடைந்த மக்கள் அனைவரும் தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கிருந்து வெளியேற முற்பட்டுள்ளனர்.

எனினும் அந்த மர்ம நபர் தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து, இந்த சம்பவம் குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேக நபரை கைது செய்தனர்.

எனினும் மர்ம நபர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.


மேலும் 7 பேர் பலத்த காயமடைந்த நிலையில், அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதேசமயம் தாக்குதலுக்கான காரணம் குறித்த தகவல் தற்போதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இதையடுத்து கத்திக் குத்து தாக்குதல் நடத்திய நபரிடம் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-4)

# பேருந்து - பாரவூர்தி மோதி விபத்து

## 37 பேர் ஸ்தலத்திலே பலி, பலர் படுகாயம்



(யவுண்டேவுக்கு)

கமெரூனின் மேற்கு கிராமமான நேமலில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 37 பேர் உயிரிழந்ததுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

70 ஆசனங்கள் கொண்ட இந்தப் பேருந்து, மேற்கு நகரமான ஃபோம்பனில் இருந்து தலைநகர் யவுண்டேவுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று கொண்டிருந்தபோது, பாரவூர்தி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்தில் பயணித்தவர்களில் பெரும்பாலோர் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக பயணித்தவர்கள் என குறிப்பிடப்படுகிறது.

இந்தப் பேருந்தில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்துள்ளதுடன் மீட்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில், பலர் படுகாயமடைந்துள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (நி-4)

# பனிச்சரிவில் சிக்கி மலையேறு வீரர்கள் 12 பேர் உயிரிழப்பு



(டெஹ்ரான்)

ஈரானில் பனிச்சரிவில் சிக்கி மலையேறு வீரர்கள் 12 பேர் உயிரிழந்தனர்.

ஈரான் நாட்டின் தெற்கு பகுதியில் அல்போர்ஸ் மலைத்தொடர் அமைந்துள்ளது.

இந்த மலைத்தொடர் சுற்றுலாப் பயணிகள் மலையேற்றத்தில் ஈடுபடுவது வழக்கமான ஒன்று.

இந்நிலையில், அல்போர்ஸ் மலையில் நேற்று முன்தினம் 20 இற்கும் அதிகமானோர் குழுவாக இணைந்து மலையேறியுள்ளனர். அதற்கு முன்னதாக இரவு நிலவிய கடுமையான பனிப்பொழிவு காரணமாக மலைத்தொடரில் பனியின் அளவு பல மடங்கு அதிகரித்துள்ளது.

வீரர்கள் மலையேறிய போது மலையின் ஒரு பகுதியில் திடீரென பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த பனிச்சரிவில் மலையேறிய அனைவரும் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்த ஈரான் மீட்புப் படையினர் பனிச்சரிவு ஏற்பட்ட இடத்தை ஹெலிகொப்டரில் பயணம் செய்து மாயமானவர்களைத் தீவிரமாக தேடினர். அதில் மலையேறு வீரர்களில் 12 பேர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். எஞ்சியோரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (நி-4)

# கொரோனா வைரஸ் அறிக்கைகளுக்காக சீன பத்திரிகையாளருக்கு 4 ஆண்டுகள் சிறை



(பீஜிங்)

கொவிட்-19 பரவலின் ஆரம்ப கால கட்டத்தில் வுஹானுக்கு விஜயத்தை மேற்கொண்டு பல உண்மை தகவல்களை அம்பலப்படுத்திய பத்திரிகையாளர் ஜாங் ஜான்னுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

சீனாவைச் சேர்ந்த 37 வயதான பத்திரிகையாளர் ஜாங் ஜான் முன்னாள் சட்டத்தரணியான இவர் சீனாவில் கொரோனா உருவான ஆரம்ப கட்டத்தில் அதன் உண்மை தன்மையை தெரிந்து கொள்ள வுஹான் சென்றுள்ளார்.

கொரோனா வைரஸ் பாதிப்புகள், மக்கள் அனுபவிக்கும் துயரங்கள், சீன அரசின் மெத்தனப் போக்கு தொடர்பான பல்வேறு உண்மை சம்பவங்களைச் செய்தியாக வெளியிட்டுள்ளார்.

தன்னுடைய செய்திகளை எஸ்.எம்.எஸ், வீடியோ, வீசாட், டுவிட்டர், யூடியூப் மூலம் உலகம் முழுவதும் பரவ செய்தார். ஜாங் ஜான் போன்ற பல பத்திரிகையாளர் சீனாவில் இருந்து கொடுத்த தகவல்களின் அடிப்படையிலே சீன அரசு மறைத்த கொரோனா உண்மை நிலவரத்தை உலக ஊடகங்கள் தெரிந்துகொள்ள முடிந்தது.

உண்மையை மறைக்க நினைத்த சீனா தடையாக இருந்த பத்திரிகையாளர்களை கைது செய்தது. அவ்வாறு ஜாங் ஜான் கடந்த மே மாதம் சீன அரசால் கைதுசெய்யப்பட்டார்.

அரசு விதிக்கு மாறாக கொரோனா குறித்து செய்திகளை வெளியிட்டது, வெளிநாட்டு ஊடகங்களுக்கு வுஹானில் பரவிய வைரஸ் தொடர்பாக பேட்டி கொடுத்தது, தவறான தகவல் மூலம் மக்களிடையே வதந்தி பரப்பியது என பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டன.

கடந்த நவம்பர் மாதம் அவருக்கு சிறை தண்டனை வழங்கப்பட்டது. சிறையில் தனி அறையில் அடைக்கப்பட்ட ஜாங் ஜான் அண்மையில் அவரது சட்டத்தரணியைச் சந்தித்துள்ளார்.

அவரின் மூலமே ஜாங் ஜான் சிறையில் அனுபித்த சித்திர வதை தற்போது உலகிற்கு தெரிந்துள்ளது.

இந்நிலையிலேயே அவரது மேன் முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று ஷாங்காய் நீதிமன்றுக்கு வந்துள்ளது. (நி-4)

# 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட துரித உணவுக் கடை கண்டுபிடிப்பு



(ரோம்)

இத்தாலியில் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய பாம்பேயி நகர துரித உணவுக் கடை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 79 இல் வெசுவியஸ் மலையில் ஓர் எரிமலை சீற்றம் ஏற்பட்டது. அதில் வெளிப்பட்ட எரிமலை குழம்பில் இத்தாலின் பாம்பேயிநகரம்மூழ்கிப்போனது.

மண்ணுக்குள் புதைந்து போன இத்தாலி நாட்டின் பாம்பெயி நகரத்தில் பல ஆண்டுகளாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், பாம்பெயி நகரில் தெருவோர துரித உணவகம் செயற்பட்டத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வின் மூலம் அடையாளம் கண்டுபிடித்துள்ளனர்.

ரோமாபுரி கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் வழிப்போக்கர்களுக்காக இந்த உணவகம் இயங்கி இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி அரசியல், ஆன்மீகத் தரப்புகளுடன் உறவுகள் சந்திப்பு







(யாழ்ப்பாணம்)

நீதியற்ற முறையில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை சிறை மீட்கும் விடயத்தில் ஒன்றுபடுமாறு, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் அரசியல் கட்சித் தலைவர்களையும், ஆன்மீகத் தரப்பினரையும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் நேரில் சந்தித்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதற்கமைவாக, கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன பிரதம குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா மற்றும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சி.வி.கே.சிவஞானம், அருட்பணி ஜெபரட்ணம், நீதி சமாதானத்திற்கான ஆணைக்குழுவின் தலைவர் அருட்பணி மங்களராஜா, அருட்பணி இ.ம.வி.ரவிச்சந்திரன் ஆகியோரையும் சந்தித்தனர்.

அத்துடன் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனைத் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கலந்துரையாடினர். (ஜ-4)

# மர்மமான முறையில் சிறுவன் சடலமாக மீட்பு

(பிலியந்தலை)

நுளம்பு வலை தொங்கவிடும் கம்பியில் தொங்கிய நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த 12 வயது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

பிலியந்தலை பகுதியில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தை வேலைக்கும் , தாய் பொருட்கள் வாங்க வர்த்தக நிலையம் சென்ற நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது 6 வயதான சகோதரியுடன் குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் இந்த துயர சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

வீட்டிற்கு வருகை தந்த தாய், மகனை காணவில்லை எனத்தேடிய போதே, மகன் குறித்த கம்பிய தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

மகனை மீட்ட தாய், வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதிலும் வைத்தியசாலையில் சிறுவனை பரிசோதித்த வைத்தியர்கள், சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மர்மமாக சிறுவன் உயிரிழந்தமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக பிலியந்தலை பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-7-4)

# எமது போராட்டங்களை சர்வதேச பார்வைக்கு கொண்டுவருவதனூடாகத் தீர்வைப் பெறலாம்



(கொழும்பு)

சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும் போதே எமக்கு நீதி கிடைப்பது சாத்தியமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்க ளப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வட கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை முன்னின்று நடத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரில் 71 இற்கும் அதிகமானவர்கள் இறந்து போய் உள்ளதனை ஆவணப்படுத்தி, அதனை கையளிக்கும் வட கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற கையேட்டு நிகழ்வில் தவிர்க்க முடியாத காரணத்தினால் என்னால் பங்கு பெற முடியாமையினை நினைத்து மிகவும் மனம் வருந்துகின்றேன்.

இருப்பினும் இனி வருகின்ற காலங்களில் ஒரு இளைஞன் என்ற வகையில் பல வருடங்கள் கடந்தாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியினைப் பெற்றுக் கொடுக்கும் வரையில் நான் தளர்வடைய மாட்டேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

இப்போராட்டத்தினை நீதி கிடைக்கும் வரையில் எக்கால கட்டத்திலும் கைவிடாது முன் கொண்டு செல்வேன் என உறுதியாக கூறுகின்றேன்.

நாட்டில் பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கம் தலை தூக்கியுள்ள நிலையில், எமக்குரிய நீதி கிடைப்பதென்பது சந்தேகமே.

ஆகையினால்எமது போராட்டங்களை சர்வதேச பார்வைக்கு கொண்டுவருவது எமது தலையாய கடமையாகும். எமது பிரச்சினைகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக்கொள்ள தமிழர்களாகிய நாம் அனைவரும் முன்னிற்க வேண்டும். சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும் போதே எமக்கு நீதிகிடைப்பது சாத்தியமாகும்.

தமிழர்களுக்கான நீதியினை பெற்றுக்கொடுக்க இளைஞன் என்ற வகையில் நான் நிச்சயம் முன்னிற்பேன். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கு, எவ்வாறு இருக்கின்றார்கள் என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. இதற்கு தற்போதைய அரசு பதிலளிக்க வேண்டும்.

காலங்கள் பல சென்றாலும் மக்களுக்கான எனது பணிகள் தடைகள் பலவற்றையும் தாண்டி மேற்கொள்ளப்படும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான எனது குரல் என்றும் ஒலிக்கும் என்பதை உங்களிடத்தில் கூறிக் கொள்வதுடன், இந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமையினை எண்ணி மிகவும் மனம் வருந்துகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-7-4)

# எரிப்புக்கு எதிராக எட்டு வயது சிறுவன்



(கொழும்பு)

ஜனாஸா எரிப்புக்கு எதிராக கல்முனையைச் சேர்ந்த எட்டு வயது சிறுவனும் அவரது தந்தையும் வெண் துணி கவனயீர்ப்பு நடைபவனி ஒன்றினை ஆரம்பித்து, கல்முனையில் இருந்து சாய்ந்தமருது வரை கால் நடையாகச் சென்று தமது அமைதி வழி போராட்டத்தினை பதிவு செய்துள்ளனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற குறித்த நடைபவனியில் அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், பிரதேச முஸ்லிம்கள் ஆகியோர் சுகாதார நடைமுறைகளைப் பின் பற்றி கலந்து கொண்டனர். (நி-7-4)

# தம்மிக்கவின் பானத்தை அருந்தியவருக்கு கொரோனா

(கேகாலை )

கேகாலை வைத்தியர் தம்மிக்க பண்டார தயாரித்ததாக கூறப்படும் கொரோனா தடுப்பு பானத்தை அருந்திய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிப்பிற்குஉள்ளாகிய நபர் ஒத்னம்பிட்டிய பகுதியை சேர்ந்தவர் எனவும் அங்கு இவருடன் சேர்த்து 12 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த பானத்தை வாங்குவதற்காக கேகாலையில் உள்ள மருத்துவரின் வீட்டிற்கு முன்னால் நாளாந்தம் பெருமளவு மக்கள் ஒன்று கூடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கொரோனாத் தொற்றும் ஆலய வழிபாடுகளும்

உலகையே ஆட்டிப்படைக்கும் கொவிட்-19 நோய் மனிதனுக்கு ஏற்பட்ட பெரும் சவாலாகும். வாழ்விற்கும் மரணத்திற்குமான போராட்டமாகும். மக்கள் தமது துன்பத்தினை மறந்து சிறிது நேரமாவது அமைதியாக, நிம்மதியாக இருப்பதற்காக ஆலய வழிபாடுகளை ஆற்றுகின்றார்கள்.ஆனால் இக்கொடிய தொற்று ஆலய வ்ழிபாட்டினையும் விட்டு வைக்கவில்லை. இதனால் மக்கள் பெரும் மன உளைச்சல் அடைந்துள்ளார்கள். அதிலும் பெண்கள் தான் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள் எனலாம்.

கொரோனா தொற்று உலகில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வந்தாலும் 2021 ஆம் ஆண்டிலும் கால்பதித்து தொடரப் போகின்ற சூழல் காணப்படுகையில், நாம் கொரோனாவுடன் வாழ பழகுதல் வேண்டும். அந்தவகையில் ஆலயவழிபாடு எம் வாழ்வோடு இணைந்ததாகும். எமது வாழ்வில் மகிழ்வுதரும் வேளையிலும் சரி அல்லது துயர்படும் சந்தர்ப்பத்திலும் சரி நாம் எமது உணர்வுகளை முதலில் பகிர்ந்து கொள்வது இறைவனிடம் தான். அதனால் தான் பிறந்தநாள் முதலாக திருமணநாள், வேலைக்குபோகும் முதல் நாள், பரீட்சை எழுதப்போகும் வேளை என பல சந்தர்ப்பங்களில் ஆலயத்திற்கு சென்று இறைதரிசனம் செய்கின்றோம்.

அதேபோன்று எமது முன்னோர்களது பிரிவின் தினங்களில் அல்லது மன அமைதியில்லாதபோது நாம் கஷ்டப்படும் போது ஆலய தரிசனங்களை செய்கின்றோம். இவ்வாறு எமக்கும் ஆலய வழிபாட்டிற்கும் பிரிக்கமுடியாத உறவுடையவர்களாக வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறு எமது வாழ்வு ஆலயத்துடன் இருக்கும்போது நாம் ஆலயங்களுக்கு போக முடியவில்லை என்றால் எமக்கு ஏறக்குறைய பைத்தியமே பிடித்துவிடும் எனலாம்.

2021ஆம் ஆண்டிலும் விடிவில்லாத துன்பம்தானா. இதுதான் அனைவரதும் மனதில் தோன்றும் கேள்வி.

கொரோனா வைரஸ் உலகத்தினையே ஆட்கொண்டுள்ளது. இதில் இருந்து மீள்வது என்பது பெரும் சவாலுக்குரிய விடயமாகும். இயற்கையாகவே எமது சைவத்தமிழ் கலாசார பாரம்பரியமான வாழ்க்கைமுறை, நாம் வாழும் பிரதேச வெப்பநிலை முதலியன எம்மை இக்கொடிய நோயில் இருந்து பாதுகாத்து கொண்டிருக்கின்றது எனலாம்.

இது இறைவனால் எமக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். ஆனால் எமது அலட்சியப்போக்கினாலும் பொறுப்பற்ற தன்மையினாலும் இக் கொடியநோயில் இருந்து விடுபடுவதற்குப் பதிலாக வளர்த்து வருகின்றோம்.

ஆலய வழிபாட்டிற்கு புனிதம் மிக அவசியமாகும். அதுவும் உடைகள் தோய்த்து லர்ந்தவையாக இருப்பது அவசியமாகும். இது பாதுகாப்பானது. ஆலயங்களுக்குள் செல்ல முன் கண்டிப்பாக கைகால் அலம்புகின்றோம். இவ்வேளையில் சவர்க்காரத்தினை பயன்படுத்தல் நல்லது. ஆனால் கைகளில் எக்காரணம் கொண்டும் தொற்று நீக்கித்திரவத்தினை (சனிரைசர்) பூசி செல்லுதல் கூடாது. கற்பூர தீபம் தொட்டுக் கும்பிடும்போது அது பாதிப்பினை ஏற்படுத்திவிடும். ஆலயத்தினுள் அடியார்களின் எண்ணிக்கையை கவனித்து சமூக இடைவெளியைப் பின்பற்றி முகக்கவசத்தினை அணிந்தவாறு வழிபாட்டில் ஈடுபடுதல் நன்மை தரும்.

அர்ச்சனைப் பொருட்களை கூடிய வரையில் சுவாமி சந்நிதானங்களுக்குள் கொண்டு செல்லாது கொடிமரத்தடியில் வைத்து சிவாச்சாரியார் நிவேதனம் செய்வதற்கு ஏற்றால் போல் தாமே ஆயத்தம் செய்து வைத்தல் சிறப்பாகும்.

அத்துடன் பச்சைக்கற்பூரம், ஏலக்காய் ஜாதிக்காய், கராம்பு ஏதாவது கலந்த மூலிகைத் தீர்த்தத் தினை அருந்துதல் ஆரோக் கியத்தினை தருவதுடன் சாஸ்திர ரீதியாகவும் பாதுகா ப்பாகவும் அமையும். மன நிம்மதிக்காக அமர்ந்திருந்து கும்பிட வேண்டும் என எண்ணு கின்றவர்கள் மற்ற வர் களுக்கு இடையூறாக இருக்காமல் ஆலங்களின் வெளிப் பிரகாரங்களில் அமர்ந்திருந்து வழிபாடாற்றலாம். பலரும் கேட்கும் கேள்வி கடைகளில் சாப்பாடு வேண்டுகின்றோம், ஏன் ஆலயங்களில் பிரசாதத்தினை வேண்டக்கூடாது என்பதாகும். சுகாதார அறிவுறுத்தலின் படி முதலில் நாம் வாய், மூக்கினைத்தான் மூடி முகக்கவசம் அணிகின்றோம்.

இலகுவாக தொற்று ஏற்படும் வழிகள் வாய், மூக்கு ஆகும். அதனால்பலரும் இருக்கும் இடங்களில் அல்லது வாயினை உப்புத்தண்ணி கொண்டு கொப்பளிப்பதற்கு முன்னர் நாம் எவற்றினையும் அருந்துதல் சாப்பிடுதல் கூடாதாகும். எனவேதான் பிரசாதங்களை கொடுக்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றது. எனவே பிரசாதங்களை சுகாதாரமுறைப்படி பெற்று தமது இல்லங்களில் கொண்டுவந்து சாப்பிடலாம்.

ஆலயங்களில் வழிபடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் இல்லாது போனால் நாம் கவலைப்படத் தேவையில்லை. ஆலயங்களுக்கு செல்ல இயலாதவர்களுக்கென்று அப்பொழுதே ஆகமங்கள் ஆலய கோபுரங்களையும் அதில் தெய்வச் சிலைகளையும் அமைத்துக்காட்டியுள்ளது. எனவே நாம் கவலையில்லாமல் எமக்கு இஷ்டமான தெய்வங்களை தூரத்தே நின்று தரிசித்து நற்பலனை அடையலாம்.

பொதுவாக இன்று வெளியிடங்களுக்குச் சென்று வந்த பிற்பாடு உடைகளை மாற்றுவதும், கைகால்கழுவுதல் முதலியவற்றினை செய்கின்றோம். ஆனால் ஆலயங்களில் இருந்து இல்லங்களுக்குச் சென்று எச்சந்தர்ப்பத்திலும் கைகால் கழுவி உள்ளே செல்வதில்லை.



ஆனால் தற்போதுள்ள சூழலில் என்ன செய்வது என்பது எமது மனதில் தோன்றும் கேள்வியாகும்.

எனவே தற்போதைய சூழலை நாம் கவனம் செலுத்த வில்லை என்றால் ஆலயங்களே தொற்றுக்குரிய இடமாக மாறி பெரும் ஆபத்தினை ஏற்படுத்திவிடும்.

இதனைத் தவிர்ப்பதற்கு ஆலய தரிசனம் நிறைவடைந்த பிற்பாடு இல்லங்களின் இருக்கின்ற துளசி அல்லது பசுவினைத் தரிசனம் செய்து ஆலயவழிபாட்டின் திருவருட்பேற்றினை சிந்தித்த பிற்பாடு எமது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் அருளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழலாம். ஆலயங்கள் தொற்றுக்குரிய இடமாகவும் அடியார்கள் தொற்றுக்குரியவர்கள் அல்லது பரப்புபவர்களாகவும் இருந்துவிடக்கூடாது என்பதை மனத்தில் இருத்தி ஆலய வழிபாடுகளை ஆற்றிடுவோம்.

புதிய ஆண்டில் புதுவாழ்வினை மனத்துணிவுடன் வரும் இடர்களையெல்லாம் இறையருளால் வென்று நலமாக வளமாக திருவருள் சிறக்க வாழ்ந்திடுவீர்களாக.

சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
குருமுதல்வர்,
வீணாகானகுருபீடம்,
ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச
திருக்கோவில் , சண்டிலிப்பாய்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2193

Search for people, places and things

### தயாழினி




### றதீஸ்





### ஜனுயா




### வர்ஷா




### நகுல்




### கதிர்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொரோனா பரவல் எதிரொலி வேலையின்மையால் பாரிய சிக்கல்

## நாமல் கவலை

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் நிலவரம், உலகில் வேலையின்மையை விரிவடையச் செய்துள்ளமையால், நமது சமூகத்துக்கும் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



"நாட்டில், இலவசக் கல்வி மற்றும் அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி எனும் விதிமுறை நடைமுறையில் உள்ளமையால் தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, எமது நாடு மிக உயர்ந்த கல்வியறிவு வீதத்தைக் கொண்டுள்ளது" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில், ஊடக அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, "வறுமை நீடிக்கும் சில கிராமங்களில் கூட உள்ளூர் அதிகாரிகள் தத்தமது பிரதேசங்களிலுள்ள குழந்தைகளுக்கு கல்வி கிடைக்கின்றதா? என்பதை உறுதி செய்து அனைத்துக் குழந்தைகளையும் பாடசாலைக்கு அனுப்பி வருகின்றனர்" என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் வயது வந்தோரின் கல்வியறிவு 2017 ஆம் ஆண்டு 93.2 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இது உலக மற்றும் பிராந்திய தரவுகளின்படி சராசரியை விட அதிகமானதாகும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இவ்வளவு உயர்ந்த கல்வியறிவு சதவீதத்துடன் இளைஞர்களுக்கு இடையே அதிக வேலையின்மை காணப்படுவது, ஒரு பாரிய பிரச்சினையாகும் என கவலை வெளியிட்டுள்ளார்.

"நாட்டில் வேலையின்மைக்கு, நம்பத்தகாத எதிர்பார்ப்புகளும் அரசாங்க வேலைவாய்ப்புகளுக்கு வரிசையில் இருப்பதும் கடுமையான வேலைப் பாதுகாப்பு விதிமுறைகள் இருப்பதுமே காரணமாகும். பல வருடங்களாக அடுத்தடுத்த அரசாங்கங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயன்று வருகின்ற போதிலும் திறமையான தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை நிலவி வருகின்றது". எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சு.கட்சி அரசிலிருந்து விலகப்போவதில்லை

(கொழும்பு)



அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி விலகப் போவதாகக் கூறுவதில் எவ்வித உண்மையும் கிடையாது. அவ்வாறு எந்தவொரு தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

எனினும் சில் அபிவிருத்தி திட்டங்களில் கீழ் மட்டத்திலும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றமை அதிருப்தியளிக்கிறது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து கொண்டு அதற்கெதிராகவே சிலர் சூழ்ச்சிகளை செய்வதாகவும் 2015 இல் தேசிய அரசாங்கத்தில் இணைந்து தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக சுதந்திர கட்சி செயற்பட்டமை மறக்கக் கூடிய விடயமல்ல என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளமை குறித்து வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் பிறிதொருவர் மீது விரல் நீட்டி குற்றஞ்சுமத்தும் போது ஏனைய விரல்கள் குற்றஞ்சுமத்துபவரை நோக்கியே காணப்படும். சுதந்திரக்கட்சி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களும் இவ்வாறானவர்களே.

இது குறித்து நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம். உரியவர்களிடமும் தெரிவித்திருக்கின்றோம். எனவே தான் இது போன்ற அநாவசியமானதும் போலியானதுமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் நாம் அவ்வாறு செயற்படுவதில்லை. நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களுக்காகவும் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கும் ஒத்துழைப்பு வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேச்சு

அந்த ஆளுக்குப் பேசத் தெரியாது. அவரிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்து கொள் என்று சொல்வது உண்டு. அப்படி என்றால் என்ன அர்த்தம்?

அவர் இன்னமும் குழந்தையாகவே இருக்கின்றார். இன்னும் பேச்சு வரவில்லை என்றா அர்த்தம்? அப்படி இல்லை. அவருக்கு நாகரிகமாக பேசத் தெரியவில்லை என்று அர்த்தம்.

பேசுவது என்பது மனிதனாலே மட்டுமே முடியக் கூடிய ஒரு காரியம். அப்படி இருந்தும் அதனுடைய பெருமையை அவன் இன்னமும் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதனால் தான் அவன் அளவுக்கு அதிகமாக வார்த்தைகளை கொட்டி விடுகின்றான். அதன்பின்பு அதையெல்லாம் திருப்பி அள்ள முடியாமல் கிடந்து கஷ்டப்படுகின்றான். கொட்டிய வார்த்தையை அள்ள முடியுமா?

ஒருத்தரை இன்றைக்குப் பார்த்து முட்டாள் என்று திட்டி விடுகின்றீர்கள். நாளைக்கு மறுபடியும் அவருடன் போய் நேற்று உன்னை முட்டாள் என்று சொல்லிவிட்டேன். அந்த வார்த்தையை திருப்பிக் கொடு வாங்கிக்கொண்டு போய்விடுகின்றேன் என்றா சொல்ல முடியும்? அவன் கோபக்காரனாக இருந்தால் நேற்றைக்கே அதை வேறுவிதமாக உங்களுக்கு திருப்பிக் கொடுத்திருப்பான்.

உலகத்திலே எவ்வளவோ ஜீவராசிகள் இருக்கின்றன. அதற்கெல்லாம் வாய் இருக்கு. அந்த வாயெல்லாம் எதற்கு உபயோகம்? சாப்பிடுவதற்காக. ஆனால் நமக்கு இருக்கின்ற வாய் சாப்பிடுவதற்காக மட்டுமில்லை, பேசுவதற்காகவும் தான்.

பேச முடியவில்லை என்றால்...வாய் இருந்தால் கூட அது வாயில்லா ஜீவன் தான். ஒரு பையனைப் பார்த்து அது வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும் என்றார். மற்ற பையன்களுக்கெல்லாம் முகத்திலே வாயே இல்லை என்றா அர்த்தம்? அப்படி இல்லை.

அந்தப் பையன் கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாக பேசுவான் என்று அர்த்தம். என்ன இது இன்றைக்கு தகவல் வெறும் உபதேசமாகவே போய்க் கொண்டிருக்கின்ற மாதிரி தெரிகின்றது.

சரி...விடயத்திற்கு வருவோம். எப்படி பேச வேண்டும். இதுதான் இன்றைக்கு நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. இதற்கு எட்டு விதமான குறிப்புக்களை எங்கள் பெரியவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

பேச்சுக்கு எட்டு தன்மைகள் உண்டு என்று அவர்கள் சொல்கின்றார்கள்.

அதெல்லாம் என்னென்ன? வரிசையா சொல்கின்றேன் கேட்டுக் கொள்ளுங்கள். உண்மை, நன்மை, அன்பு, நிதானம், இனிமை, ஆழம், சமயமறிதல் சபையறிதல்.

இந்த எட்டு தன்மையும் பேச்சிலே இருக்க வேண்டுமாம். இதையே கொஞ்சம் விபரமாக சில பேர் பலகையிலே எழுதி வைத்திருப்பார்கள். எழுத்திலேயாவது அதெல்லாம் இருக்கட்டுமே என்று நினைத்து நீங்கள் கூட சில இடங்களிலே இதைப் பார்த்திருக்கலாமே..

உண்மையைப் பேசுங்கள், நன்மையே பேசுங்கள், அன்பாகப் பேசுங்கள், நிதானமாகப் பேசுங்க, இனிமையாகப் பேசுங்க, ஆழமுடையதாக சிந்தித்துப் பேசுங்கள், சமயம் அறிந்து பேசுங்கள், சபையறிந்து பேசுங்கள்.

இந்த எட்டு அம்சங்களும் சரியாக பொருந்தி இருந்தால் தான் அது பேச்சு. பேசுவது எல்லாம் பேச்சாகிவிடாது. பேச்சு ஒரு சிறந்த கலை. எல்லாவற்றையும் விட பேசாமல் இருந்தும் பழகவேண்டும். அது மிகவும் முக்கியம். உண்மையை பேச வேண்டும். சத்தியத்திற்கு மதிப்பு கொடுத்தவர்களைத்தான் சரித்திரம் மதிக்கும். உண்மை பேசினால் மட்டும் போதாது. அந்த உண்மையிலே நன்மை கலந்திருக்க வேண்டும். ஒரு கொலைகாரனுக்குப் பயந்து கொண்டு ஒருத்தன் உங்கள் வீட்டுக்குள்ளே ஒளிந்திருக்கின்றான். அந்த முரட்டு ஆசாமி கையிலே அரிவாளோடு வந்து அவன் இங்கே வந்தானா என்று உங்களிடம் விசாரிக்கின்றான்.

உண்மை தான் உயர்வு தரும் என்று நினைத்துக் கொண்டு ஆமாம் உள்ளே தான் இருக்கின்றான். அடுப்பங்கரையிலே உட்கார்ந்திருக்கின்றான். போய்ப் பிடித்துக் கொள்ளுங்கள் என்றா சொல்லுவீர்கள். அது நன்மையில்லாத உண்மை. அதனால் பிரயோசனமில்லை. அதேமாதிரி உங்கள் பேச்சிலே அன்பு இருக்க வேண்டும், நிதானம் இருக்க வேண்டும், இனிமை இருக்க வேண்டும், சிந்தித்துப் பேச வேண்டும்.

சமயம் அறிந்து பேசுவதும் முக்கியம். அதைப்பற்றி நமக்கு வேறு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. எந்தநேரத்திலே யாரிடம் என்ன பேசினால் காரியம் நடக்கும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அது கைவந்த கலை. அவையறிந்து பேசுகின்ற திறமை பேச்சாளர்களுக்கு மிகவும் அவசியம். அது இல்லை என்றால் நிலைமை பரிதாபமாக ஆகிவிடும்.

ஒரு பேச்சாளர் மிகவும் மும்முரமாக பேசிக்கொண்டே இருந்தார். நிறைய நேரம் நிறுத்தாமல் பேசிக்கொண்டே இருந்தார். சபையிலே இருந்தவர்கள் எல்லாம் ஒவ்வொருத்தராக எழுந்து போய்க் கொண்டே இருந்தார்கள். கடைசியிலே இரண்டு பேர்தான் அக்கறையாக, பேசுகின்றவரை கவனித்துக் கொண்டே உட்கார்ந்திருதார்கள். மேடையில் பேசிக் கொண்டிருந்தவர் அவர்களைப் பார்த்துச் சொன்னார்...எனக்கு கூட்டம் முக்கியமில்லை. எவ்வளவு பேர் என் பேச்சை கேட்கின்றார்கள் என்பதும் முக்கியமில்லை. நீங்கள் இரண்டு பேராவது ஊக்கமாக என்னை கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றீர்கள். அது போதும். உங்களுக்காகவே நான் பேசிக்கொண்டிருக்கின்றேன் என்றார்.

இதைக் கேட்டதும் உட்கார்ந்திருந்த இரண்டு பேரிலே ஒருவர் எழுந்து அப்படி இல்லை...நாங்கள் இரண்டு பேரும் நீங்கள் பேசி முடித்தவுடன் தொடர்ந்து பேச வேண்டிய ஆட்கள் அதற்காகத்தான் உட்கார்ந்திருக்கோம்.. சீக்கிரம் முடியுங்க என்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

31

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



19.பொதுமக்கள் கலரியில் இருக்கின்றபோது புகைத்தல், கதைத்தல், கைதட்டுதல், மகிழ்ச்சி ஆரவாரம் செய்தல், பல்வேறு விதமாக ஒலியெழுப்புதல், பகிடி பரிகாசம் செய்தல், அங்குமிங்கும் நடத்தல், நின்று கொண்டிருத்தல், விளையாடுதல், சைகை காட்டுதல், சபையை எட்டிப்பார்த்தல், விரல்களை கைகால்களை அல்லது வேறு பொருட்களை நீட்டுதல், பல்வேறு பொருட்களை சபைக்குள் வீசுதல், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கையசைத்தல், குறிப்பாலுணர்த்துதல், நித்திரை செய்தல், குறிப்புகள் எழுதுதல், புத்தகங்கள், பத்திரிகைகள் வாசித்தல் போன்றவை முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளன.

20. பொதுமக்கள் கலரியில் இருக்கின்றபோது பாதுகாப்பு வேலிகளுக்கு மேல் பாய்தலும் பத்திரிகையாளர் கலரியில் அமர்தலுமாகாது. அத்துடன் பொதுமக்கள் கலரியில் கடமையில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்பிடும் இடங்களில் அமர வேண்டும். சபையில் அமைதியற்ற நிலை ஏற்பட்டால் பொதுமக்கள் கலரியில் இருக்கின்றவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு பாராளுமன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு/ பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் நீங்கள் அதற்கு உடன்பட வேண்டும்.

21. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயலாற்றாத ஆட்களை அல்லது குழுவினரை பாராளுமன்ற வளவிலிருந்து/கலரியிலிருந்து உடனடியாக அகற்றுவதற்கு பாராளுமன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்/ பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடவடிக்கையெடுப்பார்கள்.

22. பொதுமக்கள் நுழைவாயில் அமைந்துள்ள பிரதேசத்தினூடாக அடிக்கடி வாகனங்கள் ஓடுவதால், கலரியிலிருந்து பொதுமக்கள் நுழைவாயிலுக்குத் திரும்பி வந்ததன் பின்னர் உங்களதும் உங்கள் குழுவினரதும் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துதல் அத்தியாவசியமாகும். பொதுமக்கள் நுழைவாயிலிலிருந்து திரும்பி ஜயந்திபுர சோதனைச்சாவடி வரை உங்களையும் உங்கள் குழுவினரையும் கொண்டு செல்வதற்கான பேருந்து வரும்வரை அமைதியாக இருக்கும்படி உங்கள் குழுவினருக்கு அறிவுறுத்துக. குறிப்பாக உங்கள் குழுவில் பிள்ளைகளை அங்குமிங்கும் செல்லாமல் ஒழுங்காக வைத்திருப்பதில் கவனம் செலுத்துக.

23. தியவன்னா நதிக்கரையில் கூடி நிற்றல் ஆபத்தானது என்பதால் உங்கள் குழுவில் உள்ள பிள்ளைகளையும் ஏனைய உறுப்பினர்களையும் கரை ஒரத்தில் கூடிநிற்க இடமளிக்க வேண்டாம்.

24. பாராளுமன்றத்தைப் பார்வையிட்டுவிட்டு வெளிச்செல்கின்ற பொதுமக்களது வசதியை முன்னிட்டு பாராளுமன்றக் கட்டடத்தின் பொதுமக்கள் நுழைவாயிலுக்கு அருகிலும், பாராளுமன்றத்துக்கு முன்னாலுள்ள விளையாட்டு மைதானத்துக்கு அப்பால் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை வளவிலும் நினைவுப்பொருள் விற்பனை கூடங்கள் அமைந்துள்ளன. உங்களுக்குத் தேவையான நினைவுப் பொருட்களை அங்கே கொள்வனவு செய்யலாம்.

25. பாராளுமன்றத் தொகுதியின் பொதுமக்கள் நுழைவாயிலில் நினைவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நீங்கள் கருதுவீர்களாயின், நாணயத்தாள்களை மாத்திரம் எடுத்து வருமாறும், பாராளுமன்றக் கட்டடத்தினுள் நாணயக்குற்றிகளை எடுத்துவருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அறிவிக்க விரும்புகிறேன்.

**வாகனங்களின் பிரவேசம், தரித்து வைத்தல் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய விசேட ஏற்பாடுகள்**

மேற்படி 2 ஆம் பந்தியின் பிரகாரம் அனுமதி பெற்று அல்லது பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காகவே வருகைதரும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய விருந்தினர்கள் வருகைதரும் வாகனங்கள் பாராளுமன்ற தொகுதிக்கு முன்னால் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு எதிர்த்திசையிலுள்ள சிற்றுண்டிச்சாலை வளவில் அமைக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடத்திற்குள் உட்பிரவேசித்தல் வேண்டும். இவ்வாறு உட்பிரவேசிக்க முன்னர், பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காக பெற்றுக்கொண்ட பூர்வாங்க அனுமதிப் பத்திரமொன்று இருப்பின் அதனை அவ்விடத்தில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணில் கடமையிலிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இன்றேல் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இந்நடைமுறையை நிறைவேற்றிய பின்னரே தங்களது வாகனத்தை வாகனத் தரிப்பிடத்திற்குள் செலுத்த முடியும்.

பாடசாலை சீருடை அணிந்த மாணவர்களை ஏற்றிவரும் பேருந்துகள் தவிர ஏனைய வாகனங்களில் வருகைதரும் விருந்தினர்கள் மேற்படி 9 ஆம் பந்தியின் பிரகாரம் ஜயந்திபுர பாதுகாப்புச் சோதனை அலகுக்கு செல்ல வேண்டும். அவ்விடத்தில் இவர்கள் உடல் ரீதியான பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், இதன் பொருட்டு மேற்படி பாதுகாப்புப் பிரிவிற்கு, தங்களது ஒத்துழைப்பை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பாடசாலை சீருடை அணிந்த மாணவர்களை ஏற்றிவரும் பேருந்துகளை, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ் வாகனத் தரிப்பிடத்திலிருந்து உடல் ரீதியான பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்துவதற்காக குறித்த இடத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அவ்விடத்தில் பாடசாலை மாணவர்களும் அவர்களை அழைத்துவரும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரும் உடல் ரீதியான பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் வருகைதரும் பேருந்துகளும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும். பின்னர், குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டதன் பின்னர், பாடசாலை மாணவர்களும் அவர்களை அழைத்துவருபவர்களும் மீண்டும் அப்பேருந்திற்கு அனுப்பி வைக்கப்படுவர் என்பதுடன் அழைத்துச் செல்வதற்காக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடன் பேருந்து ஜயந்திபுர பாதுகாப்பு நுழைவாயிலின் ஊடாக, குறிப்பிட்ட பாதுகாப்புச்சோதனை மற்றும் பதிவு செய்யப்படுதற்கிணங்க, பாராளுமன்ற கட்டடத் தொகுதியின் பொதுமக்கள் நுழைவாயிலிற்கு அனுப்பி வைக்கப்படும். இதன் பொருட்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பாராளுமன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் தமது உச்சமட்ட ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

பாராளுமன்ற கட்டடத்தின் பொது மக்களின் நுழைவாயிலிற்கு அருகே, மாணவர்கள் மற்றும் ஏனையவர்களை இறக்கிவிட்ட பின்னர் அங்கு வருகை தருகின்ற பொலிஸ் உத்தியோகத்தருடன் பேருந்து மீண்டும் ஜயந்திபுர பிரதான நுழைவாயில் ஊடாக மேற்படி பஸ் தரிப்பிடத்திற்கு அனுப்பப்படுவதுடன், மீண்டும் அழைக்கப்படும் வரை அங்கு நிறுத்திவைத்திருத்தல் வேண்டும்.

மேற்படி வாகனத் தரிப்பிடத்தில் வழங்கப்படுகின்ற வாகன ரோகன் அட்டையின் ஒரு பகுதியை சாரதி வசமும், மற்றைய பகுதியை வருகை தருகின்ற குழுவுக்குப் பொறுப்பான அதிபர் அல்லது பொறுப்பான ஆசிரியர் வசமும் வைத்திருத்தல் வேண்டும். எந்தவொரு காரணத்தைக் கொண்டும் இந்த பேருந்துகளை பாராளுமன்ற வளவில் அல்லது வருகைதரும் வீதியின் இருபுறமும் நிறுத்திவைத்தல் முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தைப் பார்வையிட்டு பொதுமக்கள் நுழைவாயிலுக்கு மீண்டும் வருகை தந்த பின்னர் மேற்படி ரோகன் அட்டையைப் பயன்படுத்தி, மக்கள் உட்பிரவேசிக்கின்ற இடத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் உங்களின் பேருந்தை அவ்விடத்திற்கு வரவழைக்க நடவடிக்கை மேற்கொள்வார்கள். அவ்வாறு வருகைதரும் போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடன் ஜயந்திபுர பாதுகாப்பு பரிசோதனைப் பிரிவின் ஊடாக உரிய பாதுகாப்பு பரிசோதனைகள் மற்றும் பதிவுகளை மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டு மேற்படி பேருந்துகள் பொதுமக்கள் உட் பிரவேசிக்கின்ற இடத்திற்கு அனுப்பப்படும்.

மேற்படி பேருந்துகள் பாராளுமன்ற வளவிலிருந்து வெளியே செல்லும் போது அழைத்து வருகின்ற பொலிஸ் உத்தியோகத்தருடன் ஜயந்திபுர பிரதான நுழைவாயில் ஊடாக செல்ல வேண்டும் என்பதுடன், மேற்படி நுழைவாயிலில், அழைத்துவரும் பொலிஸ் உத்தியோகத்தர் பஸ்ஸிலிருந்து இறங்கிய பின்னர் பாராளுமன்ற வளவிற்கு வெளியே செல்லல் வேண்டும்.

விருந்தினர் எவரேனும் பாராளுமன்றத்திற்கு வருகை தரும் போது, ஜயந்திபுர நுழைவாயில் தவிர வேறு எந்தவொரு நுழைவாயிலையும் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் விருந்தினர் ஒருவருடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது பணியாட்டொகுதி அங்கத்தவர் ஒருவர் வருகைதருவாராயின் அவர்களும், ஜயந்திபுர நுழைவாயிலை மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும். தமது ஆள்அடையாளத்தை உறுதிசெய்த பின்னர் மற்றும் உடற்பரிசோதனையின் பின்னர், தாம் வருகை தந்த வாகனம் அல்லது பாராளுமன்ற பஸ் சேவையைப் பயன்படுத்தி பொதுமக்கள் நுழைவாயில் வரை செல்ல முடியும். இவர்கள் பாராளுமன்றத்தின் வேறு நுழைவாயில்களுக்குச் செல்வது முற்றாகத் தடையாகும்.

முன்னனுமதி இன்றி பாராளுமன்றத்தைப் பார்வையிட மாத்திரம் வருகைதருகின்ற விருந்தினர்கள் மற்றும் பாடசாலை சீருடையில் வருகைதருகின்ற மாணவர்களைக் கொண்ட குழுக்களும், மேற்படி ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, பாராளுமன்றத்தின் பொதுமக்கள் நுழைவாயில் வரை வருகைதர முடியும் என்பதுடன் அதன் பின்னர், தமது ஆள்அடையாளத்தை உறுதி செய்த பின்னர் மேற்படி இடத்தில் பொதுமக்கள் வரவேற்புக் கருமபீடத்திலிருந்து பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான மஞ்சள் நிற விசேட அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். முன்னனுமதிபெற்றுக்கொண்டு வருகைதருகின்ற விருந்தினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு வெள்ளை நிற அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

இந்த அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற கலரிக்கு வெளியே எந்தவொரு இடத்திற்கும் செல்வது முற்றாகத் தடையாகும்.

**பாராளுமன்றத்திற்கு வருகைதரும் அரச உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

பல்வேறு கடமைகளுக்காக பாராளுமன்றத்திற்கு வருகைதருகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பாராளுமன்றத் தொகுதிக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி வழங்குதலுடன் தொடர்புடைய ஏற்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் பற்றி விழிப்புணர்வூட்டுதல்.

(தொடரும்...)

# க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு


(கொழும்பு)

**கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்துள்ளார்.**

11 பாடவிதானங்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் இடம் பெறவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைகளை மதிப்பீடு செய்யும் பணிகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## திருநீறு எனும் மேலான செல்வம்

(தொடர்ச்சி)

நெற்றியில் பூசப்படும் திருநீறு, சந்தனம், குங்குமம் மூன்றும் மற்றொரு மகத்துவமான பாதுகாப்பை நமக்குக் கொடுக்கிறது. நமது நெற்றி மற்றும் காதுகளையொட்டிய பகுதிகளில் சுமார் 72 ஆயிரம் நுண்ணிய நரம்புகளின் சேர்க்கை உள்ளது.

இந்த நுண்ணிய நரம்புகள் பலத்த அதிர்வைக் கொண்டது. இந்த நரம்புகள் சந்திக்கும் புருவ மத்தியைப் பார்த்துப் பேசினால் ஒருவரை மிக எளிதில் மயக்கி விட முடியும் என்பார்கள். ஹிப்னாடிசம் என்பது இதில் ஒரு வகையாகும்.

பெண்கள் இத்தகைய ஆபத்துகளில் இருந்து தப்பவே தினமும் தவறாமல் திருநீற பூசி குங்குமப்பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும் என நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

நெற்றியில் திருநீறு பூசி இருக்கும் பட்சத்தில் மற்றவர்கள் நம் மீது ஆளுமையைச் செலுத்த முடியாது. அது மட்டுமின்றி நெற்றியில் பூசப்படும் திருநீறு, சந்தனம் ஆகியவை குளிர்ச்சியை ஏற்படுத்தி ஞாபகச் சக்தியைப் பலப்படுத்தும். நமது திட்டமிடலை சரியானதாக இருக்கச் செய்யும். உலகம் முழுக்க உள்ள விஞ்ஞானிகள் இதை ஒத்துக் கொண்டுள்ளனர்.

திருநீறு நோய் தீர்க்கும் அருமருந்தாகவும் உள்ளது. நாம் குளித்து முடித்ததும் சில சமயம் தலையைச் சரியாகத் துவட்டாவிட்டால் நெற்றிக்குள் தண்ணீர் இறங்கி விடக்கூடும். அத்தகைய சமயங்களில் அந்தத் தண்ணீரை நாம் நெற்றியில் பூசும் திருநீறு உறிஞ்சி எடுத்து விடும். அதுபோல நாம் உடம்பில் எந்தெந்த பகுதிகளில் திருநீறு பூசுகிறோமோ அந்த இடங்களில் உள்ள நோய்கள் நிவர்த்தி பெறும்.

சமண சமயத்தில் இருந்த திருநாவுக்கரசர் திருவதிகைத் தலத்தில் திருநீறு பூசி ஈசனை வழிபட்டு தீர்த்தம் குடித்த மறுநிமிடம் அவருக்கு இருந்த சூலை நோய் மாயமாய் மறைந்தது. அதுபோல ஆதிசங்கரர் “அபிநய குப்தரின்” அபிசார மங்கீரி ஏவலால் கடும் வயிற்று வலி வந்து அவதிப்பட்டார்.

திருச்செந்தூர் தலத்துக்கு வந்த ஆதி சங்கரர் அங்கு வழங்கப்படும் பன்னீர் இலைத் திருநீறை வாங்கி உட்கொண்டதும் வயிற்று வலி நீங்கி விட்டது. அதனால்தான் திருச்செந்தூர் தலத்தில் தரப்படும் திருநீறுக்கு “பன்னீர் செல்வம்” என்றும் ஒரு பெயர் உண்டு.

திருநீறு வாதத்தால் உண்டாகும் 81 வகை நோய்களையும் பித்தத்தால் உண்டாகும் 64 வகை நோய்களையும் கபத்தால் உண்டாகும் 215 வகை நோய்களையும் தீர்க்கும் என்று வாரியார் சுவாமிகள் கூறியுள்ளார்.

தினமும் திருநீறு பூசி வந்தால் தலைவலி வராது. தோல் நோய்கள் குணமாகும். நோய்களை உண்டாக்கும் கிருமிகள் உடலில் இருந்து விரட்டப்பட்டு விடும். உடல் நாற்றம் விலகும். உடலுக்கு ஒரு தெய்வீக அழகு கிடைக்கும். கண்திருஷ்டி பாதிப்பு ஏற்படாது. பேய், பிசாசு, பில்லி சூன்யம் போன்றவை தாக்காமல் இருக்கத் திருநீறு பாதுகாவலன் போல இருக்கும்.

மனதில் தைரியம் உண்டாகும். உள்ளம் தெளிவாகும். இதனால் முடிவு எடுக்கும் திறமை உண்டாகும். பெரும்பாலான ஆலயங்களில் இறைவனுக்கு விபூதி அபிஷேகம் செய்து அந்த திருநீறை பக்தர்களுக்குக் கொடுப்பார்கள். மந்திர உச்சரிப்புகள் காரணமாக இந்த விபூதி இரட்டிப்பு சக்தி பெற்றிருக்கும். இந்தத் திருநீறு தரும் பயன்கள், சக்திகளுக்கு அளவே கிடையாது.

மந்திர சக்தி பெற்ற திருநீறை வீட்டில் வைத்தாலே போதும் நாம் நினைத்தது எல்லாம் நடக்கும். வைத்தீசுவரன் கோவிலில் திருநீற்றுடன் வேம்பு தீர்த்தமும் கலந்து கொடுக்கின்றன். இதனால் அத்தலத்துத் திருநீறு கூடுதல் தெய்வீக சக்தி பெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள்.

திருநீற்றுப் பதிகம் பாடி பாண்டிய மன்னன் நின்ற சீர்நெடுமாறனின் வெப்பு நோயைத் திருஞானசம்பந்தர் நீக்கினார் என்பதன் மூலம் திருநீற்றின் சிறப்பை உணர்ந்து கொள்ளலாம். திருநீறு நமக்குத் தரும் பலன்களைத் திருநீற்றுப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் பட்டியலிட்டுள்ளார். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## தாமதம்

(கொழும்பு)

ஆர்செனிக் கலந்திருப்பதால் நிராகரிக்கப்பட்ட சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன் கொள்கலன்களை திருப்பி அனுப்பும் செயற்பாடுகள் தாமதமாகியுள்ளன என சுங்கத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த ரின்மீன்கள் அடங்கிய 48 கொள்கலன்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

எனினும் அவை நுகர்வுக்கு தகுதியற்றது என்பதை இலங்கை தர நிரணய சபை உறுதிப்படுத்தியது.

384 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 760 மெற்றிக் தொன் எடையுள்ள குறித்த ரின் மீன்களை சீனாவுக்கே திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி, அதன் ஒரு பகுதி அண்மையில் சீனாவுக்கு அனுப்பப்பட்டது.

கப்பல்கள் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக எஞ்சியுள்ளவற்றை மீளேற்றுமதி செய்யும் செயற்பாடுகளும் தாமதித்திருப்பதாக சுங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-4)

## 39 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட்-19 ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 39 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 1,899 பேர் மொத்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-4)

## பொலிஸாருடன் மோதல் கைதியொருவர் மரணம்

(கொழும்பு)

வெயாங்கொடயில் நேற்று திங்கட்கிழமை காலை பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 37 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸ் அதிகாரிகள் நேற்றுக் காலை வெயாங்கொடயில் உள்ள ஒரு இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த சந்தேக நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேநேரம், இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த சந்தேக நபர் மீது மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## நத்தார் பொதுமன்னிப்பு காலந்தாழ்த்தப்பட்டது

(கொழும்பு)


ஒவ்வொரு நத்தார் தினத்தன்றும் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படுவர். ஆனால், இம்முறை நத்தார் தினத்தன்று எந்தவொரு கைதியும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை.

வாழ்நாள் வரையிலும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் விபரம் திரட்டப்படுவதாகவும் கடந்த நான்கு வருடங்களுக்கான விபரங்கள் பகுப்பாய்வு செய்யப்படுவதால், நத்தார் பொதுமன்னிப்பு காலந்தாழ்த்தப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

திரட்டப்பட்ட தகவல்கள் நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சின் பரிந்துரைகள் கிடைத்ததன் பின்னர், நத்தார் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலைத் திணைக்கள தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ-4)




# முல்லா ஏன் அழுதார்?



ஒருநாள் முல்லா தனியே அமர்ந்து அழுது கொண்டிருந்தார். அதைப்பார்த்த அவருடைய நண்பர் முல்லாவிடம் ஏன் அழுகிறாய்? என்று கேட்டார்.

அதற்கு முல்லா சென்ற மாதம் எனது பாட்டி ஐந்து லட்சம் ரூபாய் சொத்தை எனக்கு எழுதி வைத்து விட்டு இறந்துவிட்டார்.

பதினைந்து நாட்களுக்கு முன் எனது பெரியப்பாவும் இருபது லட்சம் ரூபாய் சொத்தை எனக்கு எழுதி வைத்துவிட்டு இறந்து விட்டார்.

எனது அத்தை சென்ற வாரம் எனக்கு முப்பது லட்சம் ரூபாய் சொத்தை எழுதி வைத்துவிட்டு அவரும் இறந்துவிட்டார்.

எனது தாத்தா மூன்று நாட்களுக்கு முன் 50 லட்சம் ரூபாயை இறக்கும் முன் எனக்கு எழுதி வைத்து விட்டார் என்று கூறிவிட்டு, மேலும் முல்லா அழுகையை நிறுத்தாமல் அழுது கொண்டே இருந்தார்.

அதற்கு நண்பர் உனக்கு கிடைத்த இவ்வளவு ரூபாய்களை வைத்து சந்தோஷப்படாமல் ஏனப்பா அழுகிறாய்? என்று கேட்டார்.

அதற்கு முல்லா, நண்பரிடம் இனிமேல் சொத்தை எழுதிவைத்துவிட்டு இறந்து போவதற்கு எனக்கு பணக்கார சொந்தக்காரர்கள் யாரும் இல்லை என்பதை நினைத்து விட்டு அழுது கொண்டு இருக்கிறேன் என்றார்.

முல்லா சொன்னதைக் கேட்ட நண்பர் மயக்கம் அடைந்து கீழே விழுந்தார்.

**நீதி:- பிறர் நமக்கு கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ வேண்டும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்




மாலை விலகி இருள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த நேரம் அது. அலெக்சாண்டர் தன்னுடைய அமைச்சர்கள் மற்றும் தளபதிகளை அழைத்தார்.

விரைவில் மாசிடோனியாவுக்கு விடை கொடுத்து விட்டுப் புறப்பட இருக்கிறோம்.

அதற்கு முன்னர் ஒரு உரையாடலை வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று அலெக்சாண்டர் சொன்னதால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வெறுமனே பேச்சுக் கச்சேரியாக அல்லாமல் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்குமே என்று அலெக்சாண்டர் விரும்பினார். விருந்து தொடங்கியது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார் அலெக்சாண்டர்.

அன்புமிக்க வீரர்களே, தளபதிகளே, அமைச்சர்களே. ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வெறுமனே நாடு பிடிக்கும் ஆசையோடு நான் படையெடுப்பில் ஈடுபடவில்லை. நம்முடைய நாகரிகத்தை, கலாசாரத்தை, பெருமைகளை அந்தந்த நாடுகளில் சென்று விதைக்க விரும்புகிறேன்.

அதேபோல நான் செல்கிற நாடுகளின் பழக்கவழக்கங்கள், அருமை, பெருமைகள் எல்லாவற்றையும் உள்வாங்கி, அதை நம்முடைய தேசத்துக்கு அனுப்பி வைக்கவும் விரும்புகிறேன்.

இதன்மூலம் உலகம் ஒன்றுபடும். அதேபோல என்னுடைய படையெடுப்பின் போது வெறும் வாள் வீசும் வீரர்களை, குதிரை செலுத்தும் வீரர்களை மாத்திரம் நான் அழைத்துச் செல்லப் போவதில்லை.

பேச்சை நிறுத்தினார் அலெக்சாண்டர். அருகில் இருந்த பழரசத்தை எடுத்து வாயில் கொஞ்சம் வாயில் ஊற்றித் தொண்டையை நனைத்துக் கொண்டார்.

(தொடரும்)

சந்தர்ப்பம் வரும் என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங் களைத் தேடிப் பெறுபவர்தான் வாழ்வில் முன்னேற் றம் காண்கிறவர்கள். – பெர்னார்ட் ஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுங்கள்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்றைய தினம் நல்லூரில் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகளின் பங்கேற்பு மன ஆறு தலைத் தருகிறது.

உண்மையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது சாத்தியப்பட் டிருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகளினால் ஜனாதி பதியான மைத்திரிபால சிறிசேனவைக் கொண்டு அனைத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கும் விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதற்கான சூழ்நிலைகள் இருந்தன. எனினும் அது நடந் தாகவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறி சேனவை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, தாம் வழங்கக்கூடிய ஆதரவுக்காக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து அதற்கு மைத்திரிபால சிறிசேன வின் சம்மதத்தைப் பெற்றிருந்தால்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகியிருக்கும்.

என்ன செய்வது நாங்கள் விதிக்கின்ற நிபந்தனைகள் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்குப் பாதகமாகிவிடும் என எம் தரப்பு கள், காரணம் கூறியதோடு எல்லாம் அம்போ என்றாயிற்று.

சரி, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நிபந்தனை விதிக்க முடியவில்லையென்றால், மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் கூட, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி தமிழ் அரசியல் தரப்புகள் வலியுறுத்த வில்லை.

மாறாக, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதம ராக்குவதிலும் அவருக்காக ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவை எதிர்ப்பதிலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்ணும் கருத்துமாக இருந்தது.

இதனால் கோபம் கொண்ட அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனைக் கூட விடுதலை செய்வதற்கு மறுத்து விட்டார்.

ஆக எங்களின் இராஜதந்திரப் பலவீனங் கள் எச்சந்தர்ப்பத்திலும் எங்களுக்கு எந்த விமோசனத்தையும் தருவதற்குத் தடையாகவே இருந்துள்ளதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்தும் ஏற்றும் கொள்வதற்குள் ஆட்சி மாற்றம் நடந்து விட் டது.

இனி ஆட்சியாளர்களுடன் அடிக்கடி சந் திப்புக்களையும் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி, தற்போதிருக்கின்ற கொரோனா சூழ மைவைக் காரணமாக முன்வைத்து அத் தனை தமிழ் அரசியல் கைதிகளையும் விடு தலை செய்விக்க வேண்டும்.

இதற்காக தொடர்ச்சியான கவனயீர்ப்பு நட வடிக்கைகளை மேற்கொள்வதுடன் ஆளுந் தரப்பையும் சந்தித்து நிலைமைகளை எடுத் துக்கூறி, மிக நீண்டகாலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடு தலையைப் பெற்றுக் கொடுக்க அனைவரும் ஒருமித்து செயலாற்ற வேண்டும்.

### சமூக இடைவெளி பேணப்படாததால்

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் பங்குபற்றிய பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வர தராஜப் பெருமாள் ஆல யத்தில் நடைபெற்ற மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவத் தின்போது சமூக இடை வெளி பேணப்பட வில்லை என்ற கார ணத்தால் ஆலய திரு விழாவில் பங்குபற்றிய பலர் தனிமைப்படுத்த லுக்கு உள்ளாக்கப்பட்டு ள்ளனர்.

எனினும், ஆலயத் தில் பூசைகள் நடை பெறுவதற்கு தடை விதி க்கப்படவில்லை. பக்தர் கள் ஆலயத்தினுள் செல்லாமல் வெளியே, ஆலய வளாகத்தில் நின்று இறை வழிபா ட்டில் ஈடுபட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

ஆலயத்தில் மகோ ற்சவ கிரியைகளை நட த்திய அர்ச்சகர்களும் ஆலய பரிபாலன சபை யைச் சேர்ந்தவர்களும் ஆலயத்திலும் வீடுகளி லும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

மேலும், தேர், தீர் த்த உற்சவ உபயகார ர்கள், மகோற்சவ ஆரம் பம் தொடக்கம் முடிவ டையும் வரை தொடர் ந்து ஆலயத்திற்கு வருகை தந்தவர்கள், தீர்த்தோற்சவத்தின் போது கடலில் மிக நெருக்கமாக நின்றவர் கள் ஆகியோரையும் தனிமைப்படுத்தும் நட வடிக்கை இடம்பெற்று வருகின்றது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வ ரனின் அறிவுறுத்தலு க்கு அமைய சங் கானை சுகாதார வைத் திய அதிகாரி பொ.யசி தரனின் வழிப்படுத்த லில் பொன்னாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச.சர்மி லன் இந்த நடவடிக் கையில் ஈடுபட்டுள் ளார். (ம-3,33)

## வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு பணி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வருட இறுதிப் பணி களை முன்னிட்டு நாளை 30.12.2020 புதன் கிழமை நண்பகல் 12 மணியுடன் காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீடக் கடமைகள் முடிவுறுத்தப்பட்டு மீண் டும் 01.01.2021 வெள் ளிக்கிழமை தொடக்கம் வழமைபோல் அனை த்துச் சேவைகளும் இடம்பெறும் என யாழ். மாவட்ட காணிப் பதிவா ளர் குணாஜினி சதீஸ் குமார் தெரிவித்துள் ளார். (நி-5)

## யாழ்.மருத்துவ பீடத்தில் 240 பேருக்கு பரிசோதனை ஒருவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று 240 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒரு வருக்கும் தொற்றி ல்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சங்கானை, நல் லூர், சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதி காரி பிரிவுகளுக்கு உட் பட்டவர்களுக்கு மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த முடிவுகள் வெளி யாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3,18)



## சிதம்பர தரிசனம்

ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.29) திருவெம்பாவை 9ஆம் நாள்

### நர்த்தனமாடி தேரிலமர்ந்து நல்லருள் தருபவன்

**பாவையை கோவையை தந்த மணி வாசகர்க்குக்**
**பாங்காய் குருந்தின் அடியில் குருவாய் அமர்ந்து**
**சாவையறுக்கும் பேரின் சாரம் பொழிந்த தளிமுதலே**
**சார்ந்தோர்க்கு ஞானமருளும் தில்லைச் சிதம்பரனே**
**நாவை அசைத்துன் புகழ்பாட நயந்துன் அடி வந்தேன்**
**நர்த்தனமாடி தேரிலமர்ந்து நல்லருள் பொழிபவனே**
**தேவை அறிந்து வரம் அருளும் காரை சுந்தரேசனே**
**தேவதேவாய் திருவெம்பாவையில் எழுந்தருளி வாராய்**

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தடைகளை வெல்ல வழி

❖ மனித வடிவம் கொண்ட அனைத்து உயிரையும் வழிபடுங்கள்,

❖ இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால், இறைவனது படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்வது அதைவிட மிக நல்லதாகும்.

❖ ஒவ்வொரு உயிரிலும் தெய்வீகத் தன்மை குடி கொண்டிருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தில் குடி கொண்டுள்ள தெய்வீகத் தன்மையை மலரச் செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

❖ தெளிந்த உண்மையையும், கருத்துத் தூய்மையையும் படைக்கலனாகக் கொள்பவர்கள் எந்த தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவது உறுதி.

❖ இறைவன் வரம்பு கடந்த பெருமைகளை உடையவன். தூய்மையான மனத்தைப் பெறுவதுடன், இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். எப்போதும் இறைவனையே சார்ந்து நிற்பதுடன் நன்னெறியில் நின்றால் உங்களை எவராலும் வெல்ல முடியாது.

❖ எப்போதும் இனிமையோடும், மகிழ்ச்சியோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்



## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

## கண்டகச் சனியின் ஆதிக்கம், கடமையில் கவனம் இனி தேவை!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

**கடக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 7 ஆம் இடமான களத்திர ஸ்தானத்திற்கு அடியெடுத்து வைக்கின்றார். இதைக் 'கண்டகச் சனி' என்று சொல்வது வழக்கம். இப்போது சனியின் நேரடிப்பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது.

'கண்டகச் சனி' என்றதும், 'ஏதேனும் 'கண்டம்' வந்து விடுமோ' என்று நினைக்க வேண்டாம். சனி மகரத்தில் தன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் கூடும்.

மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு இருக்கின்றார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதால் 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதற்கேற்ப சனியின் கடுமையைக் குறைக்கும். இந்தச் சனிப்பெயர்ச்சி காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச்செய்வது நல்லது.

**ஏழாமிடத்தில் சனி**

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு ஏழாமிடத்திற்கு வரும் சனி பகவானால், எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரும். குறிப்பாக, உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ உடலில் சிறு அச்சுறுத்தல்கள் தோன்றினாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

**சனியின் பார்வை பலன்கள்**

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், 1, 4, 9 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே உடல் ஆரோக்கியம், அறிவாற்றல், முன்னேற்றம், உற்சாகம், சுகஜீவனம், வாகனம், தாய்வழி உறவு, பூர்வீகம், பாக்கியம் ஆகிய அனைத்து ஆதிபத்யங்களிலும் வரும் மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். சனியின் நேரடிப் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்படும். சனியின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் கல்வியில் கரையேற கொஞ்சம் முயற்சி எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எதிர்பார்த்த இலக்கை அடைவது கடினம் என்றாலும், குரு பார்வை இருப்பதால் மகர குருவின் சஞ்சார காலத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் கடைசி நேரத்தில் நிறைவேறும். சனியின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பாக்கிய ஸ்தானம் பலப்படுகின்றது. எனவே தொழிலில் புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

**சனியின் பாதசாரப் பலன்கள்**

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, தனவரவு தாராளமாக வந்து சேரும். தனாதிபதியாகவும் குடும்ப ஸ்தானாதிபதியாகவும் சூரியன் விளங்குவதால், மங்கல ஓசை மனையில் கேட்க வாய்ப்பு கிட்டும்.

28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசி நாதனாக சந்திரன் இருப்பதால் வெளிநாட்டு முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். மின்னணுத் துறையிலும் கலைத்துறையிலும் பணிபுரிபவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வில் வெளிவரும் சூழ்நிலையும் ஒருசிலருக்கு ஏற்படும்.




27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, வீடு, இடம் சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முடிவு வெற்றி தரும். வீட்டை விரிவு செய்து கட்டுவதில் அல்லது கட்டிய வீட்டைப் பழுதுபார்ப்பதில் ஆர்வம் கூடும். செவ்வாய் உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவதால் பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்கள் அனைத்தும் வந்து சேரும். இந்த நேரத்தில் கும்ப இராசியிலும் சனி சஞ்சரிக்கப் போகின்றார். அப்பொழுது அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஏற்பட்டாலும், கும்ப இராசி சனிக்கு சொந்த வீடு என்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். சொந்தங்களின் பகையை வளர்த்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு எட்டாம் இடத்தில் குரு வருவதால் ஏற்றமும் இறக்கமும் கலந்த நிலை உருவாகும். வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, மிகச்சிறந்த பலன் உங்களுக்கு கிடைக்கும். குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

21.03.2022 இல் ராகு-கேது பெயர்ச்சி நடைபெறும் போது, மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இதனால் தொழில் ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே தொழில் தொடங்க வாய்ப்புகள் கைகூடி வரும். 4 இல் கேது இருப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் அடிக்கடி தொல்லைகள் உண்டு. தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். பிதுர்ரார்ஜித சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். வாகனங்கள் வாங்கிப் பயணம் செய்யும் முயற்சி கைகூடும். கேதுவின் ஆதிக்கத்தால் சகோதர வர்க்கத்தில் சச்சரவுகள் ஏற்படலாம். அவர்கள் மூலம் வாங்கிய தொகையால் பிரச்சினைகள் உருவாகலாம்.

**வெற்றி பெற வைக்கும் வழிபாடு**

புதன்கிழமை தோறும் விரதமிருந்து இராமபிரான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ராமர் பட்டாபிஷேக படத்தை இல்லத்து பூஜை அறையில் வைத்து ராமர், சீதா, அனுமன் ஆகியோருக்குரிய பாடல்களைப் பாடி வழிபடுவது நல்லது. ராமபிரான் வழிபாடு நம்பிக்கையை நிறைவேற்றி வைக்கும்.

**சனியின் வக்கிர காலம்**

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022 முதல் 09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதி சனி என்பதால், குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். திடீர் இடமாற்றம் சிக்கலை உருவாக்கும். சனி அஷ்டமாதிபதியாகி வக்கிரம் பெறுவதால் ஒருசில காரியங்கள் திடீரென முடிவாகும். குறிப்பாக பிள்ளைகளின் கல்யாணம், பெற்றோர்களின் மணிவிழாக்கள் நடைபெற்றுச் சுபவிரயங்களை உருவாக்கும்.



**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இந்த சனிப்பெயர்ச்சி ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய பெயர்ச்சியாக அமையும், அதிக விரயங்கள் ஏற்படும். உறவினர் பகை ஏற்பட்டு உள்ளத்தில் தெளிவில்லாமல் செயற்பட வைக்கும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்காமல் இருக்க, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படுவது நல்லது.

உடன்பிறப்புகளின் குணமறிந்து செயற்படுவதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். தாய், தந்தையரின் உடல்நலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றங்கள் வரலாம். வேலையில் பிரச்சினைகளும் உண்டு. நிதானத்துடன் செயற்பட்டால் நிம்மதி கிடைக்கும். (தொடரும்)

## தாயும் 3 வயது...

குழந்தையினுடைய சடலங்களை ஓமந்தைப் பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தாயும் குழந்தையும் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவிலிருந்து காணாமல் போயிருந்த நிலையில் ஊர் மக்கள் மற்றும் உறவினர்கள் அவர்களை தேடியுள்ளனர்.

ரமேஸ் ஜெயலலிதா (வயது - 42) மற்றும் அவரது மூன்று வயது மகளான நிதுர்சனா ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3,250,299)

## 2ஆம் பரி...

செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் இணுவில் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் மருதனார்மடம் சந்தையில் வர்த்தக நிலையத்தில் பணியாற்றுபவர் என்று தெரிவித்த அவர்,

முதற்சுற்று பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்றும் இரண்டாம் சுற்று பரிசோதனையிலேயே தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ம-3,18)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1646 திகதி 2020.12.28
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 04 08 25 64
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0717
M 22 29 39 66 77

மஹஜன சம்பத
திகதி 2020/12/28
சீட்டிழுப்பு இலக்கம் 4350
W 3 0 4 1 7 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 28.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2645
Q 15 17 30 61

தன நிதானய
திகதி - 2020.12.28
சீட்டிழுப்பு இலக்கம் - 387
M 10 27 56 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


## மாகாணங்களுக்...

ரார்.

இதன்படி ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் நீண்ட தூர சேவைகள் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்படும்.

இ.போ.ச தற்போது தனது வருமானத்தின் கால் பகுதியை மட்டுமே பெற்று வருகின்றது. அதற்குக் காரணம் பொது போக்குவரத்தின் மீது மக்களுக்குள்ள அச்சம் காரணமாக, மாற்று வழிகளை கையாண்டே மக்கள் பயணம் செய்து வருகின்றார்கள் என அவர் மேலும் கூறியிருக்கின்றார். (ம-3)

## தமிழ் அரசியல்...

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்,

தமிழ் அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்க வேண்டும்.

நாங்கள் எமது குடும்ப உறவுகளுடன் கூடி வாழ வேண்டும்.

தொடர்ந்து ஏமாற்றாதே! துரோகம் செய்யாதே.

கைதிகளது உறவுகளின் வலியை புரிந்து கொள்ளுக.

சமயத் தலைவர்களே! சமூக ஆர்வலர்களே! சர்வ கட்சிப் பிரதிநிதிகளே! தமிழ் அரசியற் கைதிகளை சிறை மீள குரல் கொடுங்கள்.

கைதிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உண்டு.

தசாப்தங்கள் கடந்தும் தடுப்பு சிறை தொடர தமிழர் நாம் செய்த பாவம் என்ன?

எம்முடைய உறவுகளை உயிருடன் சாகடிக்க வேண்டாம்.

கொரோனா தாக்கத்திலிருந்து கைதிகளை பாதுகாக்க வேண்டும். மற்றும் அரசே பாரபட்சம் காட்டாதே.

என வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை கையில் ஏந்தியவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த போராட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய கட்சியின் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் க.சுகாஷ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ்.பிரதி முதல்வர் ஈசன், முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், சபா.குகதாஸ், ச.சுகிர்தன், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-3,33)

## மருத்துவ வல்லு...

சமர்ப்பிக்கப்படும் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு மேலதிகமாக அடக்கம் செய்ய வாய்ப்பு உள்ளதா? என்பது குறித்து அறிவியல் உண்மைகளை பரிசீலித்த பின்னர் வல்லுநர்கள் குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர், மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் கீழ், அனைத்து உடல்களும் தகனம் செய்யப்படும். மேலும் இது குறித்து ஆய்வு செய்ய மருத்துவ வல்லுநர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# ஜி.எஸ்.பி வரிச்சலுகைகள் இல்லாமல் போகும் அபாயம்

## நளின் பண்டார எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுக் கொள்கைகளிலும் நாடு இதேபோன்று முறையற்ற விதத்தில் செல்லுமாயின் எதிர்காலத்தில் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அற்று போகக் கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021 சுபீட்சமான ஆண்டாக அமையும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் மக்களுக்கு 3 வேளை உணவதற்குக் கூட உணவு கிடைக்குமா என்பது சந்தேகமாகும். கோவிட் தடுப்பூசி கண்டு பிடிக்கப்படாவிட்டாலும் உலக நாடுகள் அவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளன. ஆனால் இலங்கையில் கொவிட் பாணியை வைத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்றார். (ம-3)

## கொழும்...

டிருந்தது.

அந்த நபர், நயினாதீவு செல்வதற்காக கொழும்பிலிருந்து இ.போ.ச பேருந்தில் யாழ்ப்பாணம் வந்தார் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. யாழ்ப்பாணம் வந்த பின்னர் கொரோனா அறிகுறிகள் தென்பட்டதை தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காக சென்ற நிலையிலேயே தொற்று உறுதியானது.

இந்த நபர் கடந்த 24ஆம் திகதி இரவு கொழும்பில் இருந்து இ.போ.ச பேருந்தில் வவுனியா வந்துள்ளார். வவுனியா பேருந்து நிலையத்தில் இறங்கி, யாழ்ப்பாணம் வந்த தனியார் பேருந்தில் பயணித்து யாழ்.நகரத்தை 25ஆம் திகதி அதிகாலை வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் வந்ததும் அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. இதையடுத்து அவர் அன்றைய தினமே, காலை 9 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்கு சென்றார்.

அங்கு தனிமைப்படுத்தல் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினமிரவு கொரோனா தொற்று உறுதியானது. (ம-3)

## கோவிட்...

னர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று திங்கட்கிழமை இரவு அறிவித்துள்ளது

இதன் மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 194ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், நாட்டில் நேற்று +530 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 41 ஆயிரத்து 605 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## இளம்...

சாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் யுவதி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் திருநெல்வேலி அம்மன் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய சூரியகுமார் சகானா என்ற இளம் யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## தேரர்களை மீண்...

செய்யும் வகையில் அவர் செயற்பட்டால், அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்போம் எனவும் அவர் எச்சரித்தார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்வதற்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)


அத கோடிபதி
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 1146
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 28.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 94,127,505
வெற்றி இலக்கங்கள் 03 66 68 74 ஆங்கில எழுத்து F
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கள்
சீட்டிழுப்பு இல: 3476
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 28.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,925,248
வெற்றி இலக்கங்கள் 20 35 49 74 ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,182,478/=
திகதி: 28.12.2020
வெற்றி வாரம்: 3027
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 28 33 53 60 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,249,100

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1320 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 28/12/2020 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Z 23 42 64 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,285,232

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1719
சீட்டிழுப்பு திகதி 28/12/2020
வெற்றி இலக்கங்கள் 03 31 46 51 ஆங்கில எழுத்து E
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 20,268,460
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# மணமகள் உட்பட 26 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற திருமணத்தில் கலந்து கொண்ட 26 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி திருமண பந்தத்தில் இணைந்த மணமகளுக்கும் கொரோனா தொற்றியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

முதலாவதாக மணமகளுக்கும் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட மேலும் இருவருக்கும் கொரோனா தொற்றியமை உறுதியாகியுள்ளது.

பிரதேச சுகாதார பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்ட ரெபிட் என்டிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்றியமை உறுதியாகியுள்ளது.

அதற்கமைய நேற்றுமுன்தினம் மக்கோன பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்ட 42 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 23 பேருக்கு கொரோனாத் தொற்றியமை உறுதியாகியுள்ளது. (ம-03)

அன்பொளி கல்வியகம்

ஆசிரியர் திரு வே. அன்பழகன் அவர்களின் 2021 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை Zoom வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. (C-1046)

மாணவர்கள் விரும்பும் வகையில் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்றது

இணைய விரும்பும் மாணவர்கள் 077 306 8999 இற்கு தொடர்பு கொள்ளவும்.

அகரம் உயர் நிலைக் கல்லூரி

கொக்குவில் மல்லாகம்

தரம் 06 - O/L வரையான [தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு – 2021

30.12.2020

காலை 6 மணி முதல் 9 மணி வரையான புண்ணிய காலத்தில் ஆரம்பமாகின்றது

குறிப்பு

தற்போதைய கோவிட் – 19 சூழ்நிலையை கருத்திற் கொண்டு zoom மூலமே வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. (5096)

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

நன்றி அகரம் நிர்வாகம்

றோயல் அக்கடமி

ROYAL ACADEMY

அரசடி றோட், யாழ்ப்பாணம். நாவலர் றோட், நல்லூர்.

புதிய கல்வியாண்டு - 2021

தரம் 6

- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

ஆரம்பம் 04.01.2021 திங்கட்கிழமை

- பெற்றோர் எமது இரு நிறுவனங்களிலும் 01.01.2021 (வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணி முதல் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
- தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு அனைத்து பாடங்களும் நிகழ்நிலைக் கற்றல் ( Zoom Class ) மூலம் நடைபெறும்.

(5100)

குறிப்பு : ஏனைய வகுப்புகளிற்கும் 04.01.2021 இல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் புதிய அனுமதிகள் வழங்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது.)

நிர்வாகி

## வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை

# பாதுகாப்பான முறையில் மீளக் கட்டியெழுப்பப்படும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை, கைத்தொழில் பாதுகாப்பான முறையில் மீள் கட்டியெழுப்பப்படும். கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள சவால்களை அரசாங்கம் குறுகிய காலத்தில் வெற்றி கொள்ளும் என சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளை வரவேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை சேவையினை மீற கட்டியெழுப்புவது கட்டாயமாகும். இலங்கையின் தேசிய வருமானத்தில் சுற்றுலாத்துறை சேவை நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றது.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்ட சவால்களை அரசாங்கம் குறுகிய காலத்தில் வெற்றி கொள்ளும். இதன் முதற்கட்டமாகவே சுற்றுலா துறை சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சேவை சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.சர்வதேச விமானங்களுக்கு விசேட வரிச்சலுகையும் வழங்கப்பட்டுள்ளது என்றார்.(ம-03)

# கொரோனா அபாயத்தின் மத்தியில் வழிப்பறி கொள்ளை அதிகரிப்பு

## பாதுகாப்பு அமைச்சுக்கு பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் கொரோனா தொற்று பரவிவரும் நிலையில் வீதிகளில் செல்வோரிடம் வழிப்பறி கொள்ளைகள் மற்றும் பிரதானமாக பெண்களிடம் சங்கிலி அறுக்கும் சம்பவங்கள் மிக மோசமாக அதிகரித்துள்ளதாக பொலிஸார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளனர்.

அமைச்சருடனான கலந்துரையாடல் ஒன்றின் போது இதனை பொலிஸார் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இவ்வாறான பின்னணியில், பாதைகளில் தனியாக பயணிக்கும் பெண்களின் தங்கச் சங்கிலிகளை மோட்டார் சைக்கிளில் வந்து கொள்ளையிட்டு செல்லும் நடவடிக்கைகள் அடுத்தடுத்து பல இடங்களில் பதிவாகியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன கூறினார்.

இந்த தங்கச் சங்கிலி கொள்ளை அதிகரிப்பு தற்போது அவதானிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன பொது மக்களை கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக மாலை நேரங்களில், தனியாக நகைகளை அணிந்து செல்லும் போது கூடிய கவனத்துடன் இருக்குமாறும் குறுக்கு வீதிகளில் இத்தகைய சம்பவங்கள் அதிகமாக பதிவாகியுள்ள நிலையில் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் கோரியுள்ளார். (ம-03)

# வவுனியாவில் கொரோனாவால் உயிரிழந்தவருக்கு சிகிச்சை வழங்கிய

## மருத்துவர் உட்பட 23 பேர் கட்டாய தனிமைப்படுத்தலில்

(வவுனியா)

வவுனியா - உலுக்குளம் பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்த நிலையில் குறித்த பெண்ணுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் உட்பட 23 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு வவுனியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டிருக்கும் நிலையில் அங்கு கடமையில் இருந்த 5 மருத்துவர்கள் உட்பட 23 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இறந்த் பெண்ணின் சொந்த ஊரான ஜன உத பகுதியில் 40 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-03)

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-962)

0768226240 DHL

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

காணி விற்பனைக்கு

நல்லூர் செட்டித் தெருவில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

( தரகர் தேவையில்லை ) (5097)

077 908 0354

077 186 4871

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.